பெரி. 103

# ஜேம்ஸெட்ஜி நஸர்வாஞ்சி டாடா

3192



அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

கைத்தொழில் அரசர் ... ... ...

# ஜேம்ஸட்ஜி நஸர்வாஞ்சி டாடா

(படங்களுடன்)

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

வித்துவான்
ச. கு. கணபதி ஐயர், B. O. L.,
எழுதியது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை.

உரிமை பதிவு] [விலை அணா 14

# ஆரியமத உபாக்யானம்

எங்கள் வெளியீடுகளில் தலைமை வகிப்பது, தெலுங்கு, கன்னடப் பதிப்புகளும் உண்டு. **150,000**—பிரதிகளுக் கதிகம் செலவாகியிருப்பதே, இவைகளின் சிறப்புக்கும், உயர்வுக்கும் தகுந்த அத்தாட்சி அல்லவா? இவைகளில், அரிய நீதிக் கதைகளும், கண்ணைக் கவரும் போடோ படங்களும் நிறைந்துள்ளன. சிறுவர் சிறுமிகளும் களிப்புடன் வாசிக்கக்கூடிய இனிய எளிய நடையில் எழுதப்பட்டவை.

**காகிதம், அச்சு, பைண்ட் மிக நேர்த்தி**

| முதல் பாகம், 24-ஆம் பதிப்பு | 2-ஆம் பாகம், 18-ஆம் பதிப்பு |
| --- | --- |
| **—விலை அணு 8—** | **விலை அணு 10** |

மாடல் அச்சுக்கூடம் சென்னை.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பத்தொன்பதாம் நூற்றுண்டு | ... | 1 |
| 2. | டாடா வம்சம் | ... | 5 |
| 3. | இளமையும் கல்வியும் | ... | 7 |
| 4. | சீனுவில் டாடா | ... | 9 |
| 5. | சோதனையில் சோர்வின்மை | ... | 11 |
| 6. | திரும்பவும் திருமகள் விலாசம் | ... | 13 |
| 7. | 'எம்ப்ரஸ் மில்' | ... | 16 |
| 8. | 'ஸ்வதேசி மில்' | ... | 19 |
| 9. | தொழிலறிவும் திறனும் | ... | 23 |
| 10. | வெற்றி விளக்கம் | ... | 30 |
| 11. | உத்தம ஊழியர்கள் | ... | 34 |
| 12. | தொழிலாளர் பிரச்னை | ... | 42 |
| 13. | இந்தியா முன்னேற்றத்தில் டாடாவின் பங்கு | ... | 48 |
| 14. | இந்தியக் கைத்தொழில்களுக்கு இடையூறும், டாடாவின் எதிர்ப்பும் | ... | 54 |
| 15. | சுற்றுப் பிரயாணங்கள் | ... | 60 |
| 16. | எண்ணங்கள் உருவாதல் | ... | 66 |
| 17. | டாடாவும் அரசியலும் | ... | 75 |
| 18. | சொந்த வாழ்க்கை | ... | 82 |
| 19. | இறுதி நாட்கள் | ... | 91 |
| 20. | பின் நிகழ்ச்சிகள் | ... | 95 |

## தமிழ் நாட்டுச் சிறு கதைகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. ராஜாஜி குட்டிக் கதைகள்
3. கன்யா குமாரி
4. சந்தனக் காவடி
5. சக்ரவாகம்
6. கனகாம்பரம்
7. தோட்டியை மணந்த அரச குமாரி
8. வெண்தாமரை
9. பவழ மாலை
10. அழகி

# முகவுரை

இந்திய மறுமலர்ச்சிக்கு நம் நாட்டில் பாடுபட்ட பெரியார் பலர். அன்னார்க்கு நாம் செய்யும் கைம்மாறு அவர்களை மறவாமையும் அவர்கள் ஏற்படுத்திய முறைகளில் ஏற்பனவற்றைக் கைக்கொண்டு ஒழுகுதலுமே யாகும். ஒருவரை மறவாம லிருப்பதற்கும் அவர்தம் கொள்கைகளை அறிந்து கொள்வதற்கும் சாதனமாக இருப்பது அவருடைய ஜீவிய சரிதத்தைத் தெரிவிக்கும் புத்தகமேயாகும். அதனால் புத்தகங்களுள் ஜீவிய சரிதங்கள் தனிச் சிறப்புடையனவாகும்.

ஜாம்ஸெட்ஜி நஸர்வாஞ்சி டாடா என்பவர் இந்தியாவில் இயந்திரக் கைத்தொழிலைப் புகுத்தி அதனைப் பலதுறைகளில் ஓங்கி நிலைபெறுமாறு செய்த காரணத்தால் 'கைத்தொழிலரசர்' என்ற சிறப்புப் பெயரை வகிக்கத் தக்கவராக இருக்கிறார். அவர் இவ்வுலகினின்றும் மறைந்து பலவாண்டுகள் ஆயினும் அவர் ஏற்படுத்திய அமைப்புக்கள் செவ்வனே கால்கொண்டு, அவற்றால் இந்தியாவுக்கு எத்தனையோ நன்மைகள் பெருகிக்கொண் டிருப்பத

னால் அவர் புகழ் குன்றின்மேலிட்ட விளக்கெனப் பிரகாசத்துடன் விளங்குகின்றது.

டாடா சாதாரணமான ஒரு பார்ஸி குடும்பத்திற் பிறந்தவரே யாயினும் தம் வாழ்நாளில் புதிய துறையிற் புகுந்து தம் சுற்றுப்புற மக்களினும் உயர்ந்து முன்னுக்கு வரலானார். "மக்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பம் கிடைக்கிறது; பலர் உறங்கிக்கொண்டிருக்கையில் நல்ல சந்தர்ப்பங்களை நழுவவிடுகின்றனர். விழிப்புடன் இருப்பவருக்கே அவைகள் காட்சியளிக்கின்றன" என்று ஒரு பெரியார் கூறியது உண்மையேயாகும். நாலடியார் என்ற நீதி நூலிலும் 'ஒருவர் உயர்வடைவதற்கும் தலையெடுக்காமல் மங்கிப்போவதற்கும் தாமே காரணராவர்' என்ற கருத்துள்ள ஒரு செய்யுள் காணப்படுகிறது.

*" நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை*
*நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்*
*மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்*
*தலையாகச் செய்வானும் தான் "*

என்பதே அச்செய்யுளாகும். அச்செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக - உதாரண புருஷராக நம் டாடாவைக் கூறலாகும்.

ஸ்ரீ டாடாவைப் பற்றிய புத்தகங்களும் கட்டுரைகளும் ஆங்கிலத்திலும் பிறமொழிகளி

லும் குவிந்து கிடக்கின்றன. தமிழ்மொழியிலோ, சாதாரணமாகப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஏற்ற ஜீவிய சரித்திரம் இதுவரையிலும் வெளிவராத குறையை எண்ணி, அல்லயன்ஸ் கம்பெனியார் இதனைத் தமிழில் எளிய நடையில் எழுதும்படி எனக்கு ஊக்கமளித்தனர். அவர்களுடைய தூண்டுதலின் காரணமாகத் தோன்றியது இது.

ஒருவருடைய ஜீவிய சரிதம் அவரைப் பற்றி மட்டும் கூறிச் செல்வதாயின் அது உண்மைச்சரிதமாகக் கருதப்படாது. அவர் வாழ்ந்த காலநிலை அச்சரித்திரத்தில் நன்ருகப் பிரதிபலித்திருத்தல் வேண்டும். மேலும், சரித்திரத் தலைவர் உயர்நிலை அடைந்ததற்கு அவரிடமிருந்த இயல்புகளும், அவரைச் சுற்றியிருந்த சூழ்வுகளும், அவற்றை அவர் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டார் என்பதும் பிறவும் அந்நூலுள் விளக்கமாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். மேற்கூறிய முறைகள் முற்றும் இப்புத்தகத்துள் ஒருவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கனம் டாடாவைப் பற்றிப் பிறமொழிகளில் உள்ள சரிதங்களையும் கட்டுரைகளையும் படித்து, அப்பொழுது அப்பொழுது நான் எழுதிவைத்திருந்த குறிப்புக்களை நான் வகுத்துக்கொண்ட அதிகாரத்தலைப்புக்களுக்கு ஏற்ற

வாறு ஒழுங்குபடுத்திக்கொடுத்தும் விஷயங்கள் சரியானவையாவென்று மறுமுறை முதல் நூல்களை ஒப்பு நோக்கியும் உதவிபுரிந்த என் மாணவ நண்பர் ஸ்ரீ வி. ஜி. துரைசாமிக்கு நான் கடமைப்பட்டவனாவேன்.

நான் இதற்குமுன் எழுதியுள்ள ஜீவிய சரிதங்களைப்படித்து இன்புற்றுத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ள என் நண்பர்களுக்கு, இப்புத்தகம் அவற்றிலும் மிகச் சுவையுடையதாக இருத்தல் கூடும் என்று தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைப்போன்று இன்னும் பல நூல்களை எழுதிக் கொண்டிருக்கும் எனக்கு இதனைப் படிக்கும் நண்பர்கள் தங்கள் உண்மையான அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார்களேயானால் நான் இம் முறையையே பின்பற்றுவதற்கும், இல்லையேல் மாற்றிக்கொள்வதற்கும் அந்த அபிப்பிராயம் உற்ற துணையாகுமென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

ச. கு. க.

7. ஸ்ரீநிவாசபிள்ளை தெரு,
எழும்பூர், சென்னை.



ஜேம்ஸெட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடா

# கைத்தொழில் அரசர்
# டாடா

---

## 1
## பத்தொன்பதாம் நூற்றுண்டு

**பா**ரத நாடு ஓராயிர வருஷம் ஓய்ந்து கிடந்து விட்டது. இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின் பெருமையையே மறந்துவிட்டது. கண்ணிலும் இனிய சுதந்தரம் போனபின் கைகட்டியும் பிழைக்கத் தொடங்கிற்று. ஒரு நாடு கீழ்மை அடைவதில் கடைசி எல்லை அதுதான். இப்படித் தன்னை மறந்த நாட்டைத் தட்டியெழுப்பப் பல பெரியார்கள் 19-ஆம் நூற்றுண்டில் தோன்றினர்கள். பல துறைகளில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தார்கள். அதனால் இந்த நூற்றுண்டே இந்தியாவின் புதுயுகம் ஆகும்.

மதவிஷயத்தில் கொண்டிருந்த மூட நம்பிக்கைகள் எத்தனை! ஜாதியால் உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை பெருகிக்கிடந்தமை எவ்வளவு! தும்பை விட்டு வாலைப் பிடிப்பதற்கொப்பவும், ஆளைவிட்டு நிழலைப் பற்றுவதுபோலவும், மதத்தின் உண்மைப் பொருளை மறந்து வெளித்தோற்றங்களைப் போற்றிவந்த காலம் அது. அப்பொழுது உண்மையொளியைக் காட்டத் தோன்றினர் **ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்**. அவருடைய சீடராகிய **ஸ்ரீவிவேகானந்த** ஞானி, "இரும்பினல் சதையும், நல்ல உருக்கினல் நரம்பும் கொண்ட இந்திய இளைஞர் தோன்றி உழைத்திட வேண்டும்" என்று கோஷித்தார்; "எழுந்து நில் பாரத!" என்று இளைஞரைத் தட்டியெழுப்பினர். "சுதந்திரமே நமது லக்ஷியம்; அதுவே இம்மக்கள் கூட்டத்தின் கண்; அதை அடைய நாடு ஒற்றுமை கொள்ளுமா?" என்று தீர ஆராயலானர் இந்தியத்தேசீயத்தின் பிதாவாகிய **தாதாபாய் நௌரோஜி**. அவருடை முழக்கம் எதிரொலியை எழுப்பிற்று. இந்த லக்ஷியத்தை எப்படியும் அடைந்தே தீருவது என்ற சங்கற்பம் கொண்ட சமூகத்தலைவர்கள் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் ஒன்று கூடினர்; தேசீய மஹாசபையான காங்கிரஸை இந்தப் பத்தொன்பதாம் நூற்றுண்டிலேதான் நிருமித்தனர்.

தினந்தோறும் பெருகிவந்த விஞ்ஞான அறிவின் பயனல் மேல்நாட்டினர், உற்பத்திகளை

அதிகரித்துத் தாங்கள் அனுபவித்ததுமல்லாமல் பிறநாடுகளுக்கும் அவற்றை அனுப்பிவந்தனர். அப்போது பாரத மக்கள் பஞ்சத்தாலும் நோயாலும் புழுக்களைப்போல் துடித்துக் கொண்டிருந்தனர். விவசாய நிலையோ தற்கால ரீதிக்கு மாறுபட்ட புராதன ரீதியிலே இருந்துவந்தது. கைத்தொழிலோ சீர்குலைந்து கிடந்தது. தேவையான செயற்கைப் பொருள்கள் மேல் நாடுகளிலிருந்து வந்து குவிந்தவண்ணமாக இருந்தன. நம் நாட்டின் செல்வம் இவ்வழியாக மேல்நாடுகளுக்கு அபரிமிதமாகச் சென்றுகொண்டிருந்தது. இங்கே தொழிலின்றி வறுமை பெருகிவந்தது. இயந்திர சாதனங்கள் இல்லை. அவற்றைக் கையாளத் தெரிந்த அறிவுள்ள தொழிலாளரும் பலர் இல்லை. அதற்கு ஆவன செய்யத்தக்க அரசாங்கமும் அப்பொழுது இல்லை. மேல் நாட்டினர் இந்த வசதிகள் யாவற்றையும் பெற்றிருந்தனர்; ஆகவே செல்வம் குவித்தனர்; அதைத் தங்கள் மக்களுக்குள்ளும் பகிர்ந்து கொடுத்தனர்.

இந்நிலையில்தான் இந்தியாவில் ஒரு தனி மனிதர் தோன்றினுர். 'விஞ்ஞான அறிவின் பயனுல் ஏற்பட்ட, ஏற்படும் இயந்திர சாதனங்களை இங்கும் கைத்தொழிலுக்கு ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது? இந்தியாவை ஏன் இயந்திர மயம் ஆக்கக்கூடாது? அறிவு வாய்ந்த தொழிலாளர் சமுதாயத்தை இங்கும் ஏன் சிருஷ்டிக்கக்கூடாது?' என்று அவர் சிந்தனை செய்தார்;

செயலில் முயன்றார்; வெற்றியும் பெற்றார். அவரே இந்திய இயந்திரக் கைத்தொழில் யுகத்தின் பிதாவாகிய **ஜாம்ஷெட்ஜி நஸர்வாஞ்சி டாடா** என்பவர்.

இந்திய சரித்திரத்தில் இப்பத்தொன்பதாம் நூற்றாண்டு சிறப்புப் பொருந்தியது என்று கூறுவது தவறன்று. இதற்குமுன் எத்தனையோ மதச் சீர்திருத்த வாதிகளும், அரசியல் ஒற்றுமை நாடியவர்களும் தோன்றி யிருக்கின்றனர். எனவே, இந்நூற்றாண்டில் அத்துறைகளில் தோன்றியவர்கள் அந்தப் பழைய ரகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறலாகும். ஆனால், உலகில் இயந்திர யுகம் தோன்றியபின் அத்துறையில் ஊக்கத்தை மேற்கொண்டவர்கள் ஒரு புது ரகத்தினரே. அக்கூட்டத்தினருள் முதல் இந்தியர் ஜாம்ஷெட்ஜியே. ஆகவே இந்தியக் கைத்தொழில் யுகத்தின் முதல் மகனாரென இவரைப் போற்றுதல்வேண்டும்.

# 2

## டாடா வம்சம்

இயந்திர சாதனங்களின் உதவியால் வியாபாரத்தைத் தொடக்கத்தில் பெருக்கிக் கொண்டவர்களில் பலர் பார்ஸி வகுப்பாரே. அவர்களுள் முன்னணிக்கு வந்த குடும்பம் டாடா குடும்பமே. அவர்கள்சுமார் 800-ஆண்டுகளாக ஸுரத்திற்கு அப்பால் 20-மைல் தூரத்தில், பரோடா சமஸ்தானத்திலுள்ள **நவ்சாரி** என்னும் ஊரைத் தாயகமாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. மேற்கிந்தியாவில் வசித்த பார்ஸிகளுக்கு நவ்சாரி ஒரு புண்ணிய ஸ்தலமாகும். ஆண்டுதோறும் அங்குள்ள பார்ஸிகளின் ஒளிக்கோயிலுக்குக் காணிக்கைப் பணம் நிரம்பவரும். ஆகவே நவ்சாரியில் வசித்த பார்ஸி குடும்பங்களில் பெரும்பாலானவை புரோகித: குடும்பங்களே. டாடா குடும்பமும் அவைகளில் ஒன்ருகும்.

தேவைக்கு அதிகமாகப் பொருள் சேர்ப்பதில் பொதுவாகக் கவனம் கொள்ளாத மற்றப் புரோகிதர் போலல்லாமல் டாடா குடும்பத்தில்

*1822*-ல் தோன்றிய **நஸர்வாஞ்சி டாடா** என்பவர் மட்டும், பொருள் ஈட்டுவதில் சிறிது கவனம் கொண்டவரா யிருந்தார். நவ்சாரியில் வியாபார தந்திரங்களைத் தெரிந்து கொண்டபின், பம்பாய்க்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஒரு பாங்கரின்கீழ் இவர் பயிற்சிபெற்ருர். நாளடைவில் நஸர்வாஞ்சி வியாபாரத்தில் முன்னணிக்கு வந்து பம்பாயில் ஓர் ஏழடுக்கு மாடிக் கட்டடம் கூட வாங்கினுர். அக்காலத்தில் ஜப்பானுக்குச் சென்ற முதல் இந்தியர் இவரேயாம்.

நஸர்வாஞ்சியின் முதற் குழந்தைதான் நம் புது மகன் ஜாம் ஷெட்ஜி நஸர்வாஞ்சி டாடா. ஆனுல் இவர் **ஜாம்ஷெட்ஜி** என்றே அழைக்கப் பட்டார். *1839*-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மூன்ரும் தேதி இவர் பிறந்தபோது, தகப்பனுருக்கு வயது பதினேழுதான். எனவே, வெகு இளமையிலேயே அவருக்கு மணமாகி யிருக்க வேண்டும்.

# 3

# இளமையும் கல்வியும்

**ஜாம்ஷெட்ஜி பதின்மூன்று வயதுவரை நவ்சாரியி**லேயேதான் கல்வி பயின்றார். ஆரம்பத்தில் சிறிது மதக்கல்வியைக் கற்றுக்கொண்டபின் எழுதப் படிக்கப் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொண்டார். பிறகு பம்பாயில் எல்பின்ஸ்டன் காலேஜில் சேர்ந்து படித்தார். அந்தக் காலத்தில் எல்பின்ஸ்டன் காலேஜ் மிகவும் பிரசித்தி பெற்றது. பொதுக்கல்வி அளிப்பதுடன், மாணவர் நல்லொழுக்க முடையவர்களாக இருப்பதிலும், மத விஷயத்தில் சமரச மனப்பான்மை கொள்ளச் செய்வதிலும் எல்பின்ஸ்டன் காலேஜ் கவனம் செலுத்திவந்தது. ஆகவே ஜாம்ஷெட்ஜி அங்கே கல்வி பயின்றது இவரது பிற்கால வாழ்வில் இவர் பல தேசத்தாரோடும், மதத்தினரோடும் பழகுங்காலையில் பெரிதும் துணை புரிந்தது.

காலேஜில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே இவருக்கு, ஒரு புரோகித குடும்பத்

தில் தோன்றிய, இவரைவிட ஐந்தாண்டுகள் இளைய ஹீராபாய் என்னும் மாதை மணம் செய் வித்தனர். ஐந்தாண்டுகள் காலேஜில் பயின்ற பின் சட்ட ஆலோசனையாளரிடம் சிறிது காலம் வேலை பழகினார். ஆனால் விரைவில் தந்தைக்குத் துணையாக வியாபாரத்தில் ஈடுபட வேண்டியவ ரானார்.

தந்தையார் நுஸர் வாஞ்சி சில கூட்டாளிக ளுடன் சேர்ந்து பலவகைச் சரக்குகளிலும் வியாபாரம் செய்துவந்ததுடன் அவ்வப்பொழுது ராணுவத்திற்கு வேண்டிய பொருள்களை அவர் களுக்குப் பட்டுவாடா செய்யும் குத்தகையையும் எடுத்துக்கொண்டார். அதன் மூலம் பணம் சேமிக்கவும் முடிந்தது.

கலாசாலைப் படிப்பு இருந்ததால், வியாபாரத் தில் இறங்கிய சில காலத்திற்குள், ஜாம்ஷெட்ஜி வியாபார தந்திரங்களையும் ஆங்காங்குள்ள விலை வாசி நிலவரங்களையும் சுலபமாக அறிந்து கொண்டதுடன், பணமாற்று விகிதங்களைப் பற்றிய விஷயங்களையும் செவ்வையாக உணர்ந்து கொண்டார். எனவே, தனிப் பொறுப்புடன் வியாபாரத்தை மேற்கொள்ளத்தக்க நிலைமையை விரைவில் இவர் அடைந்தார்.

# 4

## சீனுவில் டாடா

நஸர்வாஞ்சி 1859-இல் கல்யாண்தாஸ், ப்ரேம் சந்த்ராய்சந்த் என்னும் இருவரைக் கூட்டாளி களாகக்கொண்டு, சீனுவில் வியாபாரம் தொடங் கினர். முக்கியமாகப் பருத்தியும், அபினியுமே அங்கே அனுப்பப்பட்டன. பதிலாக இந்தியா விற்குத் தேயிலை, பட்டு, கற்பூரம், செம்பு, பித்தளை முதலானவைகளும், சீனத் தங்கமும் கொண்டுவரப்பட்டன. இவ் வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ளுவதற்காக, ஜாம்ஷெட்ஜி சீனுவுக்கு அனுப்பப்பட்டார்.

சீனு சென்றதும் விரைவிலேயே, ஹாங்காங் கில் இருந்த கடைக்குக் கிளைக்கடை யொன்றை ஷாங்ஹேயில் ஜாம்ஷெட்ஜி ஸ்தாபிதம் செய்தார்.

அதனுடன் நில்லாமல், கீழ்நாட்டில் வியாபா ரத்தைப் பெருக்க, விலைவாசி (மார்க்கட்) வசதிகளை அறிந்துகொள்வதில் இவர் மிகவும் கருத்தோடிருந்தார்.

இதே சமயத்தில் அமெரிக்கக் குடியரசில், தென் நாடுகளுக்கும் வடநாடுகளுக்கும் தகராறு கள் முற்றிவந்தன. இங்கிலாந்திலுள்ள பஞ்சு ஆலைகளுக்குத் தென்னாடுகள் பருத்தி அனுப்பிக் கொண்டிருந்தன. ஆனால் வடநாட்டின்பால் அநு தாபங்கொண்ட லங்காஷையர்க்காரர்கள் தென் னாட்டுப் பருத்தியைப் பகிஷ்காரம் செய்தனர். எனவே அப்போது இந்தியப் பருத்திக்கு ஏக மாய்க் கிராக்கி ஏற்பட்டது. 1865-இல் இருந்து இரண்டொரு வருஷத்திற்குள் இந்தியாவுக்குப் பருத்தியின் விலையாகச் சுமார் 51-கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் அதிகலாப மடைந்தவர்கள் பம்பாயின் பஞ்சு வியா பாரிகளே.

லங்காஷையர் வியாபாரத்தில் கவனம் கொண்டவர்களுள் நஸர்வாஞ்சியின் கூட்டாளி யான ப்ரேம்சந்த்ராய்சந்தும் ஒருவர். அவர் பாலும் செல்வம் குவியத் தொடங்கியது என்று கூறவும் வேண்டுமோ! பணப் பழக்கம் அதிகப் படவே அப்போது பலபல பாங்கிகள் தோன்றின. அவைகளுள் குறிப்பிடத்தக்கது ப்ரேம்சந்த் ராய்சந்தின் சம்பந்தத்தை மிகுதியாகக்கொண்ட '**ஏஷியாடிக் பாங்கிங் கார்ப்பொரேஷன்**' என்பதே. அதன் கிளையொன்றை லண்டனில் ஸ்தாபிதம் செய்வதற்காக ஜாம்ஷெட்ஜி 1863-இல் அழைக் கப்பட்டார். ஆகவே அப்போது இவர் சீனவை விட்டு வரவேண்டியவரானர்.

# 5

# சோதனையில் சோர்வின்மை

சிலமாதங்கள் பம்பாயில் தங்கியபின் ஜாம் ஷெட்ஜி லண்டனுக்குப் பிரயாணமானர். இவர் இங்கிலாந்தை அடைவதற்குள்ளாக, இவர் கொண்டு சென்ற ஆதாரப்பத்திரங்களின் மதிப்பும், சீனு விலை வாசிப்பட்டியல் (மார்க்கட் பில்) களும் அப்போதேற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மதிப்பிழந்துவிட்டன. இதே சமயத்தில் அமெரிக்காவிலும் இரண்டு கட்சிகளும் தம்முள் ஒத்துப்போகவே அமைதி ஏற்படத் தொடங்கிற்று. ஆகவே பருத்திக் கிராக்கியும் வெகு விரைவில் மாறிவிட்டது. இந்த நெருக்கடியில் பம்பாயில் முதல்நாள் குபேரனுக இருந்த பலர், மறுநாள் ஆண்டியானுர்கள். அதன் விளைவுகள் சொல்லுந்தரமல்ல. இந்த இடிக்கு ராய்சந்தும் அவரது பாங்கியும் கூடத் தப்ப முடியவில்லை. பெரிதும் பாதிக்கப்பட்டவர் அவரே என்று கூறலாம்.

கலங்காத நெஞ்சமும், விஷய அறிவும் குண மும் சீலமும் உடையவர்களால்தான், அவ்விதம் ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிக்கமுடியும். ஜாம்ஷெட்ஜியிடம் இவைகள் யாவும் பொருந்தி யிருந்தன. பாங்கியில் பணம் போட்டிருந்தோ ரிடம் ஒளி மறைவின்றி இவர் விஷயங்களைக் கூறினர். அவர்களுக்கு இவர்பால் ஒருவித நம்பிக்கை உண்டாயிற்று. இவரே பாங்கியைக் கலைப்பதை ஒப்புக்கொண்டனர். அதன்பின் இங்கிலாந்திலிருந்த சில காலத்திற்குள், இவர் அடிக்கடி லங்காஷையர் சென்று அங்கே இருக் கும் பஞ்சாலைகளைப்பற்றிய சகல தகவல்களையும் அறிந்துகொண்டார். அங்கே வேலை முடிந்ததும் ஜாம்ஷெட்ஜி பம்பாய் திரும்பவேண்டியவரானர்.

ப்ரேம்சந்த்ராய்சந்தைப் போல் அவ்வளவு இல்லாவிட்டாலும் ஓரளவில் நஸர்வாஞ்சியும் தொழில் முறிவால் பாதிக்கப்பட்டார். அதன் காரணமாகத் தமது மாடி வீட்டை விற்றுக் கடனை அடைத்துவிடும் நிலைமைக் குள்ளானர். அதன்பின் இரண்டோர் ஆண்டுகளில், தம் நாணயத்தை மறுபடியும் ஸ்தாபித்துக்கொள்ளத் தந்தையும் குமாரரும் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர்.

## 6

## திரும்பவும் திருமகள் விலாசம்

**டாடாக்களின் கஷ்டம் விரைவில் விலக ஆரம்** பித்தது. 1867-இல் அபிசீனியச் சக்கரவர்த்தி தக்க காரணமில்லாமல் சில ஆங்கிலேயரைச் சிறை செய்தார். அவர்களை விடுவிக்கும்படி பல முறை இங்கிலாந்து சர்க்கார் கேட்டும் அதை அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை. ஆகவே அவர்மேல் படையெடுக்க வேண்டிய அவசியம் ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. அதற்காக இந்தியாவிலிருந்த படைகளில் ஒரு பகுதியை லார்ட் நேபியர் என்பவரின் தலைமையின்கீழ் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

படைகளுக்கு உணவுப்பொருள் பட்டுவாடா செய்வதில் டாடாகம்பெனியாருக்கு முன்பே அனுபவம் இருந்தது. ஆகவே, இப்போதும் அக்கம்பெனியாருக்கு அப்பொறுப்புக் கிடைத்தது. படைக்கு ஒரு வருஷத்துக்கு வேண்டுமான உணவுப் பொருள்களை முன்னமேயே சேகரம் செய்யும்படி கூறப்பட்டதால்

திட்டத்திற்குமேல் அளவற்ற பெருந்தொகை அவர்களுக்குக் கிடைத்தது. ஆனல் நேபியர் கொண்டு சென்ற படை அபிசீனியத் தலைநகரை அடைவதற்குள் அவ்வரசர் பயந்துபோய்த் தானே தூக்கிட்டுக்கொண்டு மாண்டுவிட்டார். அது எவ்விதமாயினும் டாடா கூட்டாளிகளுக்கு 40-லக்ஷ ரூபாய் அதனல் லாபம் ஏற்பட்டது.

அதன்பின் அத்தொழிலை நஸர்வாஞ்சி விரும்பவில்லை. அவருடைய உடல் நலம் சிறிது குன்றியிருந்தது. ஆகவே கொஞ்ச நாள் ஓய்வு எடுத்துக்கொண்டபின் சீன, ஜப்பான் முதலான நாடுகளுக்குச் சென்று திரும்பித் தம் சொந்த ஊரான நவ்சாரியில் ஒரு மாளிகை கட்டி அதில் தம் இறுதி நாட்களை நிம்மதியாகக் கழிக்க இவர் ஏற்பாடுகள் செய்துகொண்டார்.

ஜாம்ஷெட்ஜியோ தம் பங்குக்குக் கிடைத்த லாபத்தைக்கொண்டு ஏதாவது தொழில் ஆரம்பிக்க எண்ணங்கொண்டார். பஞ்சாலை வைக்க வேண்டுமென்ற ஆவல் இவருக்கு நெடுநாளாக இருந்துவந்தது. ஆகவே அதற்குத் தக்க தருணம் அப்போது வாய்த்திருப்பதாகக் கருதினர்.

அப்போது பம்பாயை அடுத்த சிஞ்ச்போக்லியில் எண்ணெய் ஆட்டும் ஆலை (மில்) ஒன்று, மூடப்படும் நிலையில் இருந்தது. ஷேக் ஆடம் என்பவரையும், மற்றும் இருவரையும் கூட்டாளிகளாகக்கொண்டு ஜாம்ஷெட்ஜி அதை விலைக்கு

வாங்கி ஒரு பஞ்சாலையாக மாற்றினார். வேல்ஸ் ராஜ குமாரியின் ஞாபகமாக அதற்கு 'அலெக் ஸாண்டிரியா மில்' எனப்பெயரிட்டார். அதை நிர்வகிக்கும் முழு அதிகாரமும் இவரிடமே விடப்பட்டது. ஆகவே பஞ்சாலை நடத்துவதில் இருக்கும் பொறுப்புக்களை ஜாம்ஷெட்ஜி அனு பவபூர்வமாக உணர்ந்துகொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. சுமார் இரண்டாண்டு களுக்குள் அலெக்ஸாண்டிரியா மில் நல்ல லாபம் கொடுக்க ஆரம்பித்தது. இருந்தபோதிலும் ஜாம்ஷெட்ஜி தம் அனுபவத்திற்கும், தொழில் திறமைக்கும் தக்கபடி தனியாக ஒரு மில் வைப்பதில் நாட்டம் கொண்டிருந்தார். அது லாபம் கொடுப்பதை அறிந்த பலர் அதை விலைக்கு வாங்கிக்கொள்ள முன்வந்தனர். ஆகவே, ஜாம் ஷெட்ஜி அலெக்ஸாண்டிரியா மில்லை ஸ்ரீ கேசவ்ஜி நாய்க் என்னும் பருத்தி வியாபாரிக்கு விற்றுவிட்டார்.

# 7

## 'எம்ப்ரஸ் மில்'

ஜாம்ஷெட்ஜி தம் தனிப்பொறுப்பில் பஞ்சாலை ஏற்படுத்துவதற்குமுன் ஒரு முறை மேல் நாடுகளுக்குச் சென்று பஞ்சாலை சம்பந்தமான தகவல்களையெல்லாம் அறிந்து கொள்வது நலமெனக் கருதினார். ஆகவே 1873-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பம்பாயை விட்டுப் புறப்பட்டு, எகிப்து, ஸிரியா, பாலஸ்தீனம், துருக்கி முதலான நாடுகளின் வழியாக விரிவாகப் பிரயாணம் செய்து கொண்டு இங்கிலாந்து சென்றார். அங்கே லங்காஷையரிலுள்ள பஞ்சாலைகளைப்பற்றியும், நவீன இயந்திர சாதனங்களைப் பற்றியும் தெளிவாக அறிந்து இந்தியா திரும்பினார்.

பருத்தி விளையும் வட்டாரத்திற்குள்ளேயே பஞ்சாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்றும், நிலக்கரி, தண்ணீர் வசதிகள் நிரம்ப இருக்கவேண்டிய பிராந்தியமாகவும் அது இருக்கவேண்டுமென்றும் எப்போதுமே டாடா கருதிவந்தார். அதனுடன் அது ரயில் வசதிகளும் உள்ளதாக இருத்தல்

அவசியம். அத்தகைய இடமொன்றைத் தேர்ந்து எடுப்பதற்காக இந்தியாவில் பலவிடங்களுக்கும் நேரிலேயே அவர் செல்லலானர். முடிவாகத் தாம் விரும்பும் எல்லா வசதிகளும் நாகபுரியில் கிடைக்குமென எண்ணிய இவர் அங்கே ஆலை ஏற்படுத்துவதற்கு வேண்டிய காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினர். பஞ்சாலைக்கேற்றது பம்பாயே என்று யாவருமே கருதிவந்த காலம் அது. ஆகவே டாடாவின் கருத்தை அறிந்த பம்பாய் வாசிகள் சிரித்தனர். ஆனால் அதற்கெல்லாம் டாடா மனந்தளரவில்லை. அவர்களுடைய நகைப்பைப் பொருட்படுத்தாமல் இவர் தம் காரியத்தில் அதிகக் கருத்தைச் செலுத்தலானர்.

நாகபுரி அரசரிடம் பத்து ஏகர் நிலம் விலைக்கு வாங்கி வெகு துரிதமாக ஆலைக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டுவதிலும், இயந்திரங்களை நிர்மாணிப்பதிலும் இவர் ஈடுபட்டார். ஈண்டு ஒரு ரஸமான சம்பவம் குறிப்பிடத்தக்கதாகும். கட்டடங்கட்ட அடிப்படைகள் போடுவதற்காகப் பூமி தோண்டப்பட்டு மலைமலையாக மண் குவிக்கப்பட்டிருந்தது. அப்போது ஆலையின் பங்குகளை வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட ஒரு மார்வாரி கனவான், பொன்னை மண்ணாக்கும் திட்டத்தில் தாம் பங்கு வாங்க முடியாதெனக்கூறி மறுத்துவிட்டாராம். ஆனல் அதே ஆலை அதிக லாபம் கொடுத்துப் பொன் வந்து

குவிந்த காலத்தையும் அவர் தம் கண்ணாரக் கண்டாராம். அப்போது அவர், "டாடா மண்ணையே பொன்னாக்கிவிட்டார்" என்று கூறினாராம்.

1876-ஆம் ஆண்டின் இறுதிக்குள் வேலைகள் யாவும் முற்றுப்பெற்று 1877-ஆம் ஹூ ஜனவரிமீ முதல் தேதி யன்று, மத்திய மாகாணங்களின் பிரதம கமிஷனராக இருந்த **ஸர் ஜான் மோரிஸ்** என்பவரின் தலைமையில் ஆலையின் திறப்புவிழா நடத்தினர். அன்றுதான் மாட்சிமை மிக்க விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் சக்கரவர்த்தினியாகப் பிரகடனம் செய்யப்பட்டார். ஆகவே கம்பெனியின் பெயர் "மத்திய இந்திய நூல் நூற்பு நெசவுத் தொழில் கம்பெனி" என்றிருந்தாலும் மில்லுக்கு அந்த நன்னாளின் ஞாபகார்த்தமாகச் 'சக்கரவர்த்தினியார் ஆலை' (எம்ப்ரஸ் மில்) எனவே பெயர் சூட்டப்பட்டது.

## 8

## ‘ஸ்வதேசி மில்’

‘எம்ப்ரஸ் மில்’ சுமார் பத்தாண்டுகள் வெற்றிகரமாக வேலை செய்துவந்தது. எனினும் நாட்டில் உபயோகப்படும் மெல்லிய துணி வகைகள் இன்னும் இங்கே உற்பத்தி செய்யப்படவில்லை. சீனதேசச் சந்தைகளில் விலைபோன தடித்த நூலைத் தவிர மெல்லிய நூலும் இங்கே கிடையாது. அவை மேல் நாடுகளிலிருந்தே இறக்குமதி யாகிவந்தன. அப்போதே ‘சுதேசி’ உணர்ச்சி எங்கும் ஆரம்பமாகி யிருந்தது. மெல்லிய துணிகளையும், நூலையும் உற்பத்தி செய்து, பிரிட்டிஷ் துணிகளுடன் போட்டியிட டாடா எண்ணங்கொண்டார். அதற்காகப் புதிய முறையில் ஓர் உயர்தர ஆலையை ஏற்படுத்துவது அவசியம் என்றும் உணர்ந்தார். ஆகவே ‘ஸ்வதேசி மில்ஸ் கம்பெனி லிமிடெட்’ என்னுமோர் புதிய கம்பெனி அவரால் தொடங்கப்பட்டு 1886-ஆம் ஆண்டு செப்டம்பர் மீ 13-ந்தேதி அது பதிவு செய்யப் பட்டது.

பம்பாயில் விக்டோரியா நந்தவனத்தின் அருகில், புதிய ஆலைக்காக இடம் வாங்கிப் பூர்வாங்க ஏற்பாடுகளை டாடா துரிதப்படுத்திவந்தார்.

இச்சமயத்தில் பம்பாய் மாகாணத்தின் பெரிய ஆலையெனக் கருதப்பட்டு வந்ததும், பம்பாயிலிருந்து 9 மைல் தூரத்தில் கூர்லாவில் இருந்ததுமாகிய 'தரம்ஸி ஆலை' ஏலத்திற்கு வந்தது. அது சுமார் 25 ஆண்டுகள் உபயோகமாகிப் பழமைபட்டதெனினும் தயாராக இருக்கும் ஆலையை விடுவானேன் என்ற எண்ணத்தோடும், அவசியமான இரண்டோர் இயந்திர மாற்றங்களால் வேலையை அங்கேயே சரிவர நடத்தக்கூடும் என்ற நம்பிக்கையோடும் அதை டாடா ஏலத்தில் எடுத்தார். ஆனால் நாளடைவில் தாம் நினைத்ததற்கு நேர் மாருக அந்த ஆலையின் நிலைமை இருப்பதையும், ஸரஸமானதென்று தாம் கருதியது, மிகவும் அதிகச் செலவை வைப்பதையும் இவர் கண்டார். அந்த ஆலையின் இயந்திரங்கள் முழுமையையுமே மாற்றவேண்டிய அவசியம் கூட நேரிட்டது. 12½ லக்ஷ ரூபாய்க்கு எடுக்கப்பட்ட அது, அவருக்கு 50 லக்ஷத்திற்கு மேல் செலவு வைத்து விட்டது.

'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்கள். வாழ்வில் எதிர்பாராத விதமாய் ஏமாந்து போதலும் நேரிடுகிறது. அற்ப முதலாளிகளாக இருப்

பின் மனமுடைந்து போய் நொடித்துப்போயிருப் பார்கள். ஆனால் டாடா இதற்கு அயரவில்லை. தைரியமும் விடாமுயற்சியும் கொண்டு தொழிலை முன்னேற்ற வெகு திறமையுடன் வேலை செய்தார். ஆலையின் ஒவ்வொரு பகுதியையும் தாமே நேரில் பார்வையிட்டு அதற்கு அவசிய மானவற்றை வெகு விரைவில் செய்து முடித் துக் காரியத்தை எப்படியும் சித்தியாக்கவேண்டு மென்னும் துணிவைச் சிறிதும் இழக்காமலிருந் தார். ‘முயற்சி திருவினையாக்கும்’ என்றபடி நாளடைவில் அந்த ஆலை நல்ல நிலைக்குக் கொண்டுவரப்பட்டதுடன் அது ‘**ஸ்வதேசி மில்**’ ஆகவும் ஆக்கப்பட்டது.

இந்தியப் பஞ்சாலைத்தொழிலின் சரித்திரத் தில் ‘தரம்ஸி’ ஆலையைப் போன்றதோர் உளுத் துப்போன ஆலை, ‘ஸ்வதேசி மில்’ என்ற பெயர்பூண்டு ஓர் உயர்தர ஆலையான கதைக்கு ஈடு எங்கும் காணமுடியாது. இந்த அற்புதத்தைச் செய்து முடித்தவர் டாடாவே. அத்தகையார் தொழிலில் தீரர் எனக் கொண்டாடப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது?

1891–ஆம் ஆண்டு வாக்கில் டாடா அகமதாபாத் திலிருந்த ‘**அட்வான்ஸ் மில்**’லின் பேரில் கடனாக மூன்று லக்ஷம் ரூபாய் கொடுத்திருந்ததாகத் தெரி கிறது. அந்த மில்லின் நிர்வாகம் எக்காரணத் தாலோ சீர்குலைந்துபோகவே, அதனை மூட

வேண்டிய நிலைமை வந்துவிட்டது. நீடித்த சட்டவிவகாரங்களுக்குப் பிறகு அதையும் டாடா வாங்கிக்கொண்டார். தான் எதிர்பார்த்தபடி யன்றி மோசமான நிலைமையில் அது இருந்ததோ டல்லாமல், விலை நிலவர மாறுதலால் அது மதிப்பையும் இழந்திருந்தது. ஆகவே அதன் பங்குகளை வினியோகிக்காமல் பூராவையும் தாமே ஏற்றுக் கொண்டு விரைவில் அதையும் இவர் செம்மைப் படுத்தினர். 'தரம்ஸி'யைச் சீர்ப்படுத்தியவருக்கு இது ஒரு பொருட்டல்ல. ஆகவே இரண்டொரு வருஷங்களுக்குப் பின் அதற்கும் கிராக்கி ஏற்பட்டதால் அகமதாபாத் அட்வான்ஸ் மில்ஸ் லிமிடெட்காரர்கள் அதை ஏழு லக்ஷம் ரூபாய்க்கு மேலாகக் கொடுத்து விலைக்குப் பெற்றுக்கொண்டனர்.

# 9

## தொழிலறிவும் திறனும்

‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்று சொல்லுவதுண்டு. டாடா, தம் தகப்பனுருக்கு உதவியாக வியாபாரத்தில் இறங்கிய நாள் தொட்டு, வியாபார நுணுக்கங்களை அறிந்து கொள்வதில் கொண்டிருந்த சிரத்தையையும், தங்கள் சரக்குகளுக்கேற்ற வியாபார ஸ்தலங்களைக் காணுவதில் இவருக்கிருந்த திறமையையும் கவனித்தால், இவருடைய பரந்த அறிவும் விடா முயற்சியும் நன்கு விளங்கும். அதுமட்டுமன்று. இவர் ஏஷியாடிக் பாங்கிங் கார்ப்பொரேஷனின் அலுவலாக முதல் முறையும், அதன்பின் ‘எம்ப்ரஸ் மில்’ தொடங்குவதற்கு முன் ஒரு முறையும் இங்கிலாந்து சென்றிருந்த சமயங்களில் லங்காஷையர் சென்று இயந்திர சாதனங்களைப் பற்றிய விவரங்களையும் நாளடைவில் அடைந்த அபிவிருத்திகளையும் அறிந்துகொண்டதல்லாமல், அவ்வப்பொழுது அவைகளில் செய்யப்படும் பரிசோதனைகளிலும் தம் கவனத்தைச் செலுத்தினுர். டாடாவின் வெற்றிக்கு அவரது

சலியாத ஆராய்ச்சியும் விஷயஞானமுமே காரணம் என்று கூறுதல் மிகையாகாது.

புதுப்புதுப் பொறிகள் தொழிலில் புகுத்தப்படும்பொழுது, பழையவை நல்ல முறையில் இருப்பினும் அவைகளை உடனுடன் மாற்ற டாடா ஒருபோதும் தயங்கினதில்லை. அதனுல் ஏற்படும் சிறிய பொருள் நஷ்டத்தைப் பொருட்படுத்தினுல், பொருள் உற்பத்தியில் ஏற்படும் நஷ்டம் அதிகமானதொன்றுகும். 'எம்ப்ரஸ் மில்' ஏற்பட்ட சில மாதங்களுக்குள் அதில் இரண்டொரு முக்கியமான பொறியின் பாகங்கள் இரண்டாந்தரத்தவை யென்பதை இவர் உணர்ந்தார். ஆகவே 1878-இல் இவர் மூன்றும் முறையாக இங்கிலாந்து சென்று மிகவும் உயர்தரமான பாகங்களை வாங்கி அனுப்பினுர். இப்படி இவர் செய்தது மிகவும் சரி என்பது அதன் அடுத்த ஆண்டின் லாபத்தைக் கவனித்தால் தெரியவரும். அதனுடன் ஆண்டுதோறும், தேய்மானத்திற்கு ஈடுசெய்ய வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்து, அவசியமான பாகங்களை மாற்றுவதையும் ஒரு வழக்கமாக இவர் ஏற்படுத்தினுர். விஷய ஞானமற்ற எந்த முதலாளியும் அந்தக் காலத்தில் இம்முறையின் மேன்மையை உணர்ந்திருப்பாரா என்பது சந்தேகமானதாகும்.

டாடா இங்கிலாந்திலிருந்தபோது வளையக் கதிர்கள் (Ring Spindles) எவ்வளவு தூரம்

பழைய கதிர்களைவிடச் சிறந்த பலனையளிக்கும் என்பதைப் பரிசோதனை செய்து வந்தார்கள். ஆகவே இவர் இந்தியா வந்தவுடன் அவைகளை 'எம்ப்ரஸ் மில்'லில் சோதனைப்படுத்தலானார். இவருக்கு இயந்திரங்கள் சப்ளை செய்துவந்த 'பிளாட் சகோதரர்' என்னும் கம்பெனிக்காரர் கள் பழமைப் பிரியர்கள். 'புதியன புகுத்த'லில் தயங்குபவர்கள். ஆகவே '**ப்ருக்ஸ் அண்ட் டாக்னி**' கம்பெனியாரிடம் வளையக் கதிர்களைச் செய்து தரும்படி இவர் ஏற்பாடு செய்தார். அமெரிக்கா வில், அவை எதிர்பார்க்கும் பலனளிக்காது என்று கருதினர். அப்பொழுது, அவை லங்கா ஷையரிலும் சோதனை நிலையிலேயேதான் இருந் தன. ஆனால் டாடா வெகு விரைவில் அவைகளை நல்ல பலனளிக்கும் முறையில் திருத்தி உபயோ கத்திற்குக் கொண்டுவந்தார். அதனால் உற்பத்தி $1\frac{1}{2}$ மடங்கு அதிகரித்தது. நாளடைவில் அவ் வளையக் கதிர்களுக்கு எங்கும் தேவை உண்டா கவே மிகத் தயக்கங்கொண்ட 'ப்ளாட் சகோ தரர்'களும் அவைகளைச் செய்து தருவதில் இறங்கினார்கள்.

இயந்திரங்களில் செலுத்திய கவனத்துடன் டாடா நிற்கவில்லை. பருத்தி பயிர்செய்யப்படும் தோட்டங்களுக்கு அருகிலேயே பருத்தி சுத்தம் செய்யும் தொழிற்சாலைகளையும் இவர் நிறுவினார். தோட்டங்களில் விளையும் பருத்தியைப்பற்றிய

விவரங்களிலும் தம் கவனத்தைச் செலுத்த லானார்.

தூங்கி யெழுந்த ஜப்பான் விரைவில் சீனச் சந்தைகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தது. இந்தியாவிலும் ஏராளமான அயல் நாட்டுச் சரக்குகள் குவிந்து வந்தன. அவை மெல்லிய ரகத்தைச் சேர்ந்தவைகளே. தங்களிடம் உள்ள சந்தைகளை இழக்காமலிருக்க வேண்டுமாயின் மற்ற நாடுகளைப்போல் மெல்லிய துணி உற்பத்தி செய்ய எகிப்தியப் பருத்தியை இந்தியாவில் விளைவிக்க வேண்டும் என்று டாடா 1896-இல் ஒரு பொது விஞ்ஞாபனம் விடுத்தார். தமது எகிப்தியப் பிரயாணத்தின்போது அங்கே விளையும் பருத்தியைப் பற்றிய தகவல்களை இவர் அறிந்து கொண்டிருந்தார். அது விளையத்தக்க நிலம் சிந்து மாகாணந்தான் என்று தெளிந்து தமது சொந்தப் பொறுப்பிலேயே அதைப் பரீக்ஷிக்கத் தொடங்கி, குடியானவர்களுக்கு ஊக்க மளித்தார். ஆனால் பிற்காலத்தில் அதைத் தொடர்ந்து நடத்த அவருக்கு அவகாச மின்மையால், முடியாது போயினும், அப்பரிசோதனைகள் மத்திய சர்க்காரின் விவசாய ஆராய்ச்சி இலாக்காவிற்குப் பெரிதும் பயன்பட்டன. அவ்விலாக்காவில் பரிசோதனை செய்யப்படும் பருத்தியின் தன்மைகளை அறிந்து அதிகார பூர்வமாக அவைகளை நிர்ணயிக்கும் பொறுப்பு டாடா

கம்பெனிக்குக் கிடைத்ததென்பதே அவரது சிறப்பை விளக்கும்.

ஒரு வியாபாரியின் திறமையை எடுத்துக் காட்டக்கூடியது எது? தன் சரக்குகளுக்குச் சந்தைகளைக் கண்டுபிடிக்கும் சாமர்த்தியமேயன்றோ! கொலம்பஸ் எதற்காக ஆழந்தெரியாத கடலின் ஆபத்தையும் பொருட்படுத்தாது கடற் பிரயாணம் செய்தார்! வாஸ்கோடி காமா எதற்காக வாகை சூட்டப்பட்டார்! இந்தியச் சந்தையைக் காணும் முயற்சிக்காக வன்றோ! இத் துறையிலும் தம் காலத்தில் இந்தியாவில் டாடா பின்னடைந்து விடவில்லை. உலகத்தின் எல்லா நாடுகளிலும் இவர் பிரயாணம் செய்தார். ஆகவே ஆங்காங்கு ஏஜண்டுகளை அனுப்பிக் கடைகள் ஏற்பாடு செய்து அங்குள்ள சந்தைகளில் தம் சரக்குகளுக்கு ஆதரவு கிடைக்குமாறு திறமையுடன் முயற்சிகள் செய்தார். ஜாவா, புஷைர், ஸ்மர்ணு முதலான இடங்களுக்கு நூல் ஏராளமாக ஏற்றுமதியாயிற்று. ஏடன், ஏதன்ஸ், மால்டா முதலான இடங்களிலும் சந்தைகளைக் கைப்பற்றப் பிரயத்தனங்கள் நடந்தன. சின்ன ஆசியாவில் அப்போது இத்தாலிய வியாபாரமே பெருகியிருந்தது. தக்க ஏஜண்டுகளை நியமனம் செய்து வெகு விரைவில் டாடா அதைக் கைப்பற்றினார். 1906-ஆம் ஆண்டிற்குள் ‘டாடா ஆலை’யின் துணிகள் அங்கே

யுள்ள எல்லாக் குக்கிராமங்களிலும் நுழைந்து விட்டன என்றே கூறலாம்.

டாடாவின் திறமையை விளக்கும் மற்றொரு விஷயமும் இங்கே குறிப்பிடத்தக்கதாம். வியாபாரிகள் எப்போதும் தங்கள் நாணயம் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். 'ஸ்வதேசி ஆலை' ஆரம்பித்த முதல் ஆண்டில், 75,000 ரூபாய் துண்டு விழுந்தது. பங்குதாரர்களுக்கு லாபப் பிரிவுகளைக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. ஆகவே 'ஸ்வதேசி மில்'லின் பங்குத்தொகைகளின் மதிப்புக்குறைய ஆரம்பித்தது.இச்சமயம் டாடா இங்கிலாந்திலிருந்தார். இச்செய்தியை யறிந்ததும் இவர் உடனே பம்பாய் திரும்பினார். தமது நாணயத்திற்குக் குறைவு ஏற்பட்டிருப்பதைக் கண்டதும், கொஞ்சங்கூடத் தயங்காமல் 'எம்ப்ரஸ் மில்' லிலுள்ள தம் பங்குகள் சிலவற்றை விற்றார். அவற்றுடன் தம் சொந்தச் சொத்துக்களுள் சிலவற்றையும் விற்று உடனே நஷ்டத்திற்குத்தக்க ஈடு செய்தார். இந்தத் துணிச்சல் வீண்போகவில்லை. மறுபடியும் டாடாவின் நாணயத்துக்குப் பழைய கௌரவம் உண்டாயிற்று. அதனுடன் நில்லாமல் 'ஸ்வதேசி ஆலை'யிலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் பங்குக்கு 45 ரூபாய் லாபப் பிரிவினை கொடுக்க முடிந்தது.

முடிவாக, டாடாவின் தொழில் அறிவையும், திறமையையும் எடுத்துக்காட்ட 'தரம்ஸி மில்'

உருப்பட்டதே போதிய சான்ருகும். அத்தகைய கூரிய புத்திபடைத்த ஒருவர் 20 ஆண்டுகளுக்குள் அதாவது 1895-க்குள் செல்வச் சீமானுகி விட்டதில் ஆச்சரியமில்லே. சேர்த்த பொருளே நாட்டின் பொருளாதார நிலேமையை உயர்த்தப் பயன்படும் முறையில் எப்படி உபயோகிக்க வேண்டுமென்பதையும் இவர் பிற்காலத்தவருக்கு உதாரணமாகும் வண்ணம் செய்து காட்டினர். காரியக்கருத்துடையவரென்றும், வியாபாரத்தில் தீரரென்றும், சரியான முறையில் நாட்டுக் கைத்தொழிலே முன்னேற்றமடையச் செய்யக் கூடிய திறமைசாலி என்றும் சந்தேகத் திற்கிடமின்றி விளங்கிய இவருடைய பெயர் இப்பெரிய தேசத்தின் கைத்தொழில் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதற்கு ஐயமுண்டோ ?

# 10

## வெற்றி விளக்கம்

பெரிய தொகையை முதலாக - அதிலும் கூட்டு முதலாகப் - போட்டு, பெரிய கைத் தொழில்களை ஏற்படுத்த முன்வருதல் இப்போது கூட நம் நாட்டில் அருமையாக இருக்கிறது. அப்படியிருக்கையில், எழுபது எண்பது ஆண்டு களுக்குமுன், அதாவது டாடா தொழில் மேற் கொண்டிருந்த காலத்தில் கேட்கவும் வேண் டுமா! ஒருவர் எவ்வளவு திறமையுடையவராக இருப்பினும், உலக அறிவும், வியாபார தந்திரங் களும் தெரிந்து திடநெஞ்சமும் கொண்டவராக இருந்தாலும், அவர் ஏற்படுத்தும் பெரிய தொழில் முயற்சிகளில் கூட்டுப்போடப் பலர் முன்வருதல், மிகவும் அருமையாகவே இருந் திருக்கும். அதோடு ஆண்டுதோறும் பங்குத் தொகைகளின் பேரில் லாப விகிதங்கள் கிடைக் காவிட்டால், உடனே பலவிதப் புரளிகள் பரப் பப்பட்டுத் தொழிலின் நாணயமும் விரைவில் கெட்டு விடுவதாகவும் இருந்திருக்கும். ஆகவே

டாடா இவ்விஷயத்திலும் மிக்க அக்கரை கொண்டிருந்தார்.

முயற்சி திருவினை ஆக்கா திருக்குமா? ஆண்டுதோறும் 'எம்ப்ரஸ் மில்'லின் வருமானம் அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. அதனால் பங்குத் தொகைகளின் பேரில் கொடுக்கப்பட்ட வீதாசார லாபமும், உயர்ந்து கொண்டே வந்ததெனக் கூறவும் வேண்டுமா? முதல் பதினெட்டு ஆண்டுகளில் சராசரி சாதாரணப் பங்குகளுக்கு 20 சத விகிதமும், போனஸ் பங்குகளுக்கு 43 சத விகிதமும் லாபம் கிடைத்தது. 'எம்ப்ரஸ் மில்' ஏற்பட்டதால் அது உள்ள ஜில்லா பூராவுமே செழிப்படைந்தது. ஆலை பெருகப் பெருக நாகபுரிப் பட்டணமும் பெருக ஆரம்பித்தது.

பங்கு ஒன்றுக்கு ரூ. 500 வீதம், 3000 பங்கு கொண்ட 15 லக்ஷ ரூபாயை மூலதனமாகக் கொண்டு 'எம்ப்ரஸ் மில்' ஏற்படுத்தப்பட்டது. பத்தாண்டுகளுக்குள் அது 20 சதவிகிதம் பங்கின் பேரில் லாபம் அளித்தது. 1886 - 99-க்குள் இருமுறை அதன் மூலதனம் உயர்த்தப்பட்டது. பங்கு கொண்டவர்கள் எல்லோரும், லாபம் அதிகமாகக் கிடைத்து வந்ததால் பலதடவை போனஸ் பங்குகளை அடைந்தார்கள். டாடா இறந்த பின்னுங்கூட, அதில் பங்கு கொண்டிருந்தவர்கள், பங்குகளை அதிலேயே விட்டு வைத்த

துடன், தங்கள் பங்குகள் மிகவும் அதிக வருமான மளிக்கும் வைப்பாக இருப்பதையும் உணர்ந்து கொண்டார்கள். ஆலை தொடங்கி முப்பது ஆண்டுகளுக்குள், மூலதனத்திற்கு ரூ. 31,87,500 சேர்க்க முடிந்ததால் அது 1907-இல் ரூ. 46,87,500 ஆயிற்று. அதுவரை பங்குத் தொகைகளுக்குக் கொடுக்கப்பட்ட லாபங்களோ ரூ. 1,81,10,631 ஆகும். அதாவது ஆரம்ப மூலதனத்தைவிடச் சுமார் 13 மடங்கு அதிகமாக வருவாய் வந்திருக்கிறது! ரூ. 500 கொண்ட ஓர் ஆரம்பப்பங்கு அப்போது ரூ. 5718 மதிப்புடையதாகி விட்டதுடன், பங்கு லாபப் பிரிவுகளின் மூலம் அப்பங்குதார் இதுவரை ரூ 5488 அடைந்தவருமானுர். 1920-இல், மூலதனம் ரூ. 7½ கோடியாக உயர்ந்துவிட்டதுடன், அவ்வாண்டு 160 சதவிகிதம் லாபப்பிரிவு கொடுக்கப்பட்டது. அதன்பின், இரண்டொரு தடவைகளில் லாபம் அதற்குக் குறைந்திருப்பினும், மொத்தத்தில் நல்ல லாபத்தையே இது அளித்துவந்தது.

‘ஸ்வதேசி மில்’லும் ஏற்பட்ட மூன்ருண்டுகளுக்குள் நல்ல லாபம் கொடுக்க ஆரம்பித்தது. ரூ. 500 கொண்ட அதன் பங்கொன்று 1896-ல், அதாவது 10-ஆண்டுகளில் மதிப்பில் ரூ. 750 ஆக உயர்ந்திருந்தது. பிளேக்குக்கு இலக்காகிப் பம்பாய் அவதியுற்றதற்குப் பின்பு கூட, அதில் லாபம் கிடைக்காமலிருக்கவில்லை.

பங்கொன்றுக்கு ரூ. 35-லிருந்து, ரூ. 65 வரை லாபம் கிடைத்தே வந்தது. 1905-இல், பங்கொன்றுக்கு ரூ. 125 லாபம் பிரிந்தது. பின் வருஷங்களிலும் லாபம் அதிகரித்தே வந்ததுடன் ஆரம்பப் பங்குகளின் மதிப்பும் உயர்ந்தது.

தொழில் இவ்விதம் வெற்றி பெறவே டாடாவின் பெயர், திருநெல்வேலியில் பருத்திப் பயிர் செய்யும் குடியானவர் முதல், பஞ்சாப் குடியான்வர் வரையிலும், மேற்குக் கரையில் பம்பாய் மாகாணப் பருத்தி விவசாயிகள் முதல், கிழக்கே வங்காளப் பருத்தி பயிரிடுவோர் வரையிலும், பிராபல்யமடைந்தது.

## 11

## உத்தம ஊழியர்கள்

நாட்டின் நலனைப் பெருக்கப் பல இயக்கங்கள் தோன்றுகின்றன. பல சிறந்த கைத்தொழில்கள் ஏற்படுகின்றன. ஆனால் அவை தாமாக முளைத்து விட மாட்டா. சிந்தித்துப் பார்த்தால் அவைகள் ஏற்படக் காரணமானவர்கள் தந்நலமற்ற தனிப்பட்ட பெரியோர்களே என்பது தெரியும். தாங்கள் ஈன்ற அக்குழந்தைகளின் வளர்ச்சிக்கெனவே அப்பெரியார்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்துவிடுகின்றனர். ஆகவே அவர்கள் உள்ளவரையில் அவைகள் நேர்த்தியாக வளர்கின்றன. ஆனால் அவர்களுக்குப்பின் அவ்வளவு கண்ணும் கருத்துமாக அவைகளைப் போற்றத் தக்கவர்கள் இன்றேல் அவ்வியக்கங்கள் செத்து மடிந்துவிடுகின்றன. அல்லது உருக்குலைந்து போய்விடுகின்றன. ஆகவே ஸ்தாபகர்களுக்குத் தக்க ஊழியர்கள் வாய்த்தால்தான் அவர்களுக்குப் பின்னும் அவர்கள் ஏற்படுத்தியவை செம்மையாக வளர்ச்சிபெறும்.

அப்படித்தக்கவர்கள் கிடைக்கப்பெறின் 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்றே மகிழ்வெய் தலாம்.

டாடா அப்படிப்பட்ட ஊழியர்களை அடைந் தமை அவர் செய்த பாக்கியமென்பதைவிட இந் நாடு செய்த பெரும் பாக்கியம் என்று கூறுவதே சரியாம். ஏனெனில் இந்திய சுபிக்ஷத்திற்காக அவர் கண்ட கனவுகளை நனவாக்கிய பெருமை, பெரும்பாலும் அவருடைய சகாக்களையே சாரும். **பெஸோன்ஜி தாதாபாய், பர்ஜோர்ஜி பாஷா, ஜேம்ஸ் ப்ரூக்ஸ்பீ, ஜெர்மியா லேயான், ரோஸ்கூ** போன்ற ஊழியர்களும், **ஆர். டி. டாடா** போன்ற உறவி னரும் டாடாவின் குமாரர்களான **தோரப்ஜியும், ரத்தன்ஜியும்** அப்பெருமைக்குப் பாத்திரமானவர் களாவார்கள். டாடாவின் குமாரர்கள் அவர் காலத்துக்குப் பின்னும் அவருடைய விசுவா சமான ஊழியர்கள் என்றே தங்களை நினைத்துக் கொண்டு அவர் குறையாக விட்டுச் சென்ற வேலைகளைப் பூர்த்திசெய்தார்கள்.

**'எம்ப்ரஸ் மில்'** துவக்கம் செய்யப்பட்டதி லிருந்து டாடா நாகபுரியிலேயே இருக்கவேண் டியவரானார். தமக்கு வலது கையாக, தக்க திற மைகொண்ட யாராவது கிடைப்பார்களா என்று டாடா எண்ணமிட்டுக்கொண்டேதான் இருந் தார். புத்தி கூர்மையும், விசாலமான பொது அறிவும், யோக்யதையும், இவைகட்கெல்லாம்

மேலாக டாடாவின் இஷ்டத்திற்கொத்தபடி நடக்கக்கூடிய எண்ணமும் உடையவராக ஒருவர் கிடைக்கவேண்டுமென்ருல் அதற்காகவே அவர் பிறந்திருந்தாலன்றி, கிடைத்தல் இயலாது. ஆனால் அத்தகையார் ஒருவர் பிறந்தே இருந்தார். ஜி. ஐ. பி. ரயில்வேயில் சாமான் போக்கு வரவு மேல் பார்வையாளராக (Superintendent) இருந்த **பெஸோன்ஜி தாதாபாய்** என்னும் பார்ஸி இளைஞரே அவர். பஞ்சாலையில் முன் அனுபவம் அவருக்கில்லாவிட்டாலும் அவரது நல்ல நிர்வா கத் திறமையும், சிந்தனை சக்தியும், விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதில் தக்க பக்குவமும், வேலை கள் எவ்வளவு கடினமானவைகளாய் இருந் தாலும் தைரியமாக அவைகளை மேற்கொள்ளும் திடமும் டாடாவை வசீகரித்தன. 1876-இல் அவர் டாடாவின் ஊழியத்தில் அமர்ந்தார். அதன்பின் இரண்டாண்டுகளில் ஆலையின் முன் னேற்ற விஷயமாக, அவருடைய தன்மைகள் கொண்டாடப் பெற்று, ஓர் ஆலைக்குத் தனி மானேஜராக நியமனம் பெற்றூர்.

டாடாவிற்குப் பின்னும் இவருடைய ஆலை கள் அதிகச்செழிப்பை அடைந்தேவந்தன. அதற் குப் பெரும்பாலும் காரணரானவர் பெஸோன்ஜி தாதாவே. எல்லா வகைகளிலும் அவர் உண்மையி லேயே பெரிய மானேஜராக விளங்கினுர். 'எம் ப்ரஸ்' ஆலையை நிர்வாகம் செய்ததோடல்லாமல், ஸ்வதேசி ஆலையை ஆரம்பித்தபோது டாடா

அடைந்த கஷ்டங்களிலும் அவருக்கு உற்றதுணையாக அவர் நின்றார். நாளடைவில் டாடாவுக்கும் அவருக்கும் ஏற்பட்ட அந்யோந்யம் மிகவும் பாராட்டத்தக்கது. **1911**-இல் அவருக்கு அரசரால் 'வீரர்' (Knighthood) என்ற பட்டம் கிடைத்தமை எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அடுத்தாற்போல் டாடாவின் சிஷ்யரும் ஊழியருமான **பர்ஜோர்ஜி பாஷாவைக்** குறிப்பிடாமலிருக்க முடியாது. அவர் சிலகாலம் டாடாவின் காரியதரிசியாக இருந்தார். பாஷாவின் தந்தை இறந்தபின் அவர் டாடாவின் ஆதரவிலும், அவருடைய மேற்பார்வையிலுமே இருந்தார். எல்பின்ஸ்டன் காலேஜில் படிப்பு முடிந்தபின் லண்டன், எடின்பர்க், கேம்ப்ரிட்ஜ் முதலான இங்கிலாந்தின் சிறந்த இடங்களிலெல்லாம் கல்வி பயின்று, கராச்சியிலுள்ள சிந்து காலேஜின் உதவி பிரின்ஸ்பாலாக முதலில் அவர் அமர்ந்தார். ஆனால் கோகலேயின் பெர்கூசன் காலேஜில் சேருவதற்காக அதைவிட்டு அவர் வெளியேறிய பொழுது, டாடா, தாம் செய்யப்போகும் தர்ம நிதித் திட்டங்களுக்கு வேண்டிய யோசனைகளைக் கூறவும், அதற்கு ஆவன செய்வதில் ஈடுபடவும் உதவிபுரியும்படி அவரைக் கேட்கவே அவர் அதை ஏற்றுக்கொண்டார். இந்தியப் பஞ்சாலைகளின்பேரில் சர்க்கார் வரி விதித்தபோது, இந்திய ஆலைகளில்

வரும் லாப நஷ்டத்தைக் குறிக்கும் புள்ளி விவரங்களைச் சேகரிக்க டாடாவிற்கு அவரது ஊழியம் பெரிதும் உதவியாக இருந்தது. இந்தியாவில் இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கையில்தான் டாடா இறந்துவிட்டார். பிறகு அதன் சம்பந்தமான கடிதப் போக்குவரத்தைக் கவனித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும், நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் இவரைத்தான் சார்ந்தன. தவிரவும் டாடாவின் குமாரர் தோரப்ஜி மின்சாரக் கம்பெனிக்குப் பொருள் சேகரித்த போது இவரது உழைப்பு மிகவும் உதவி அளித்தது. அத்திட்டங்கள் நிறைவேற இவரது முயற்சியே பெரிதும் காரணமாயிற்று என்று துணிந்து கூறலாம்.

இயந்திர அறிவு அதிகம் இந்தியரிடையே பரவியிருக்காத அந்தக் காலத்தில் டாடாவுக்கு அத்துறையில் **ஜெரிமியா லையான், ஜேம்ஸ் ப்ருக்ஸ்பீ, ரோஸ்கூ** போன்ற ஆங்கில நாட்டவர்களின் விசுவாசமான ஊழியம் கிடைத்தமை பாக்கியமென்றே சொல்லத்தகும். டாடா 'அலக்ஸாண்ட்ரியா மில்' நடத்துகையிலும், அதன்பின், 'எம்ப்ரஸ் மில்'லுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களைப் பொறுக்கிவாங்குகையிலும்,ஜெரிமியா லையான்ஸ் இவருக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். 'எம்ப்ரஸ் மில்'லில் விளக்கதிர்களைப்

பற்றிய சோதனைகள் நடைபெற்ற போதும், '**ஸ்வதேசி மில்,**' புனர் நிர்மாணம் செய்யப்பட்டுக் கோளாறுகள் ஏற்படாமல் சரிவர நடைபெறும்படி செய்தபோதும் ஜேம்ஸ் ப்ரூக்ஸ்பீ, ரோஸ்கூ இவர்களின் இயந்திர அறிவும் பரிசோதனைத் திறமையும் வெகுவாக இவருக்குப் பயன்பட்டன.

'தந்தை மகற்காற்றும் நன்றி வையத்து முந்தியிருப்பச் செயல்' என்ற வள்ளுவர் வாக்கிற் கொப்ப, டாடா தமது இரு குமாரர்களான தோரப்ஜியும் ரத்தன்ஜியும் தம்மைப் பின்பற்றி இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்தில் தக்க கவனம் செலுத்தும் வகையிலும் தாம் பூர்த்தி செய்யாமல் விட்டுச் சென்றவைகளைப் பூர்த்திசெய்ய ஆற்றல் பெறும்வகையிலும், தக்க பயிற்சி பெறவைத்தமையால் இவருக்குப்பின் உண்மையிலேயே அவர்கள் இத்துறையில் முன்னணியில் இருந்தார்கள்.

டாடாவின் இருபதாவது வயதில் **தோரப்ஜி** பிறந்தார். தம் 16-வது வயதில் படிப்புக்காக இங்கிலாந்திற்குச் சென்றூர். கெண்ட்டில் ஓர் ஆசிரியரிடம் இரண்டாண்டுகள் கல்வி கற்றபின் கேம்ப்ரிட்ஜில் உள்ள **கோன்வைய், கையஸ்** கல்லூரிகளிலும் கல்வி கற்றூர். இவருக்கு விளையாட்டுக்களிலும் விருப்பம் அதிகம். டாடாவின் தந்தையாகிய நஸர்வாஞ்சி டாடா தம் பேரன் இங்கிலாந்தில் அவ்வளவு தூரத்தில் கல்வி பயிலுவதை

விரும்பாததால், தோரப்ஜி பம்பாய் திரும்பி இரண்டாண்டுகள் செயின்ட் ஸேவியர் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ருர். அதன்பின் '**பம்பாய் கெஜட்**' என்னும் பத்திரிகைக் காரியாலயத்தில் சுமார் இரண்டாண்டுகள் பத்திரிகைத் தொழிலில் பயின்ருர். ஆனல் 1884-இல் தமக்கு உதவியாக வியாபாரத்தில் ஈடுபட டாடா கோரவே பஞ்சாலையைப்பற்றிய விஷயங்களே அறிந்துகொள்வதில் தோரப்ஜி மூன்ருண்டுகள் ஈடுபட்டார்.

புதுச்சேரி ஆலேகளில் அப்போது ஒருவகைச் சாயத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவைகளுக்கு ஆப்பிரிக்காவிலுள்ள பிரஞ்சு கினியாவில் கிராக்கியிருந்தது. புதுச்சேரியிலும் தமது ஆலே யொன்றை ஏற்படுத்த இயலுமாவென்று பரிசோதனேசெய்து அதற்கு வேண்டிய தகவல்களேச் சேகரிக்க தோரப்ஜி சென்ருர். அவர் அவ்விதமே எல்லாவித ஏற்பாடுகளேயும் செய்துகொண்டிருக்கையில் 'எம்ப்ரஸ் மில்' லில் வேலே அதிகமாகிவிடவே அதைக் கவனிக்க இன்னெருவர் வேண்டியிருந்ததால் புதுச்சேரி விவகாரத்தை அவர் அவ்வளவோடு விடவேண்டியதாய்விட்டது.

பீராரில், பஞ்சு சுத்தம் செய்யும் ஓர்ஆலேயை ஏற்படுத்தவேண்டித் தோரப்ஜியை, அப்போது டாடா கம்பெனியின் ஊழியத்திலிருந்த அவருடைய உறவினரான ஆர்.டி. டாடாவுடன் அங்கே

சென்று தக்க இடத்தை நிர்ணயிக்கும்படி அனுப்பினுர்கள். ஆர். டி. டாடாவும் எல்பின்ஸ்டன் காலேஜில் கல்வி பயின்றவரே. டாடாவின் சீன வியாபாரத்தில் அவர் உதவி செய்திருக்கிறுர். அப்போதே அவரது ஆற்றல் விளக்கமுற்றிருந்தது. நாளடைவில் டாடா கம்பெனியில் அவரும் ஒரு பாகஸ்தராஞர். பிற்காலத்தில் தோரப்ஜி 'ஸ்வதேசி ஆலே' நிர்வாகத்தைக் கவனிக்க நேர்ந்த போது, சீஞவுக்கு அவர் மறுபடியும் சென்று அங்கே வியாபாரத்தைக் கவனித்து வந்தார். பிரான்ஸில் முத்து, பட்டு இவைகளின் வியாபாரத்தை டாடா கம்பெனியின் சார்பில் கொஞ்ச காலம் ஆர். டி. டாடாதான் கவனித்துவந்தார்.

டாடாவின் இரண்டாவது குமாரரான ரத்தன்ஜி தம் தமையஞரைவிடப் பன்னிரண்டு ஆண்டுகள் இளேயவர். இவர்கள் இருவருக்கும் இடையில் டாடாவுக்குப் பெண் ஒருத்தி இருந்து பத்தாவது வயதில் இறந்துவிட்டாள். இவர்கள் இருவரும் தக்க வயதுவந்ததும் டாடா கம்பெனியில் கூட்டாளிகளாயினர். டாடாவுக்குப் பின் அவருடைய பெயர் நிலவும் வகையில் உருக்குத் தொழிற்சாலே, பெங்களூர் இந்திய விஞ்ஞானக் கழகம், பம்பாய் மின்சாரத் திட்டம் முதலானவைகளே ஏற்படுத்த இச் சகோதரர்கள் இருவரும் மேற்கொண்ட உழைப்பும், ஆர். டி. டாடா கொண்ட சிரமமும் ஆச்சரியப்படத் தக்கனவாகும். டாடாவின் வெற்றிக்குரிய முக்கிய காரணங்கள் பலவற்றுள் தக்க சகாக்கள் ஏற்பட்டதும் ஒன்ருகும் என்று கூறுவது தவறன்று.

# 12

## தொழிலாளர் பிரச்னை

இந்த இயந்திர யுகத்தில் ஒரு நாடு முன்னேறப் பெருந்தடையாக இருப்பது அறிவுள்ள தொழிலாளர் கிடைப்பதன் அருமையே. இப்பெருந் தடை இன்னுங்கூட நம் நாட்டில் இருந்துவருகிறது. அப்படியிருக்கையில் 19-ஆம் நூற்றாண்டில் இயந்திரத் தொழிலில் இறங்கிய முதலாளிகளுக்கு இது எவ்வளவுதூரம் தொந்தரவு கொடுத்திருக்கும் என்று ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். டாடாவுக்கும் இத்தொல்லை இல்லாமற் போய்விடவில்லை. ஆனால் முதலாளிகளின் நலனை மட்டுமன்றித் தொழிலாளிகளின் நலனையும் டாடா மிகவும் நன்றாக உணர்ந்து அதற்கு ஏற்றன செய்ததால் தொழிலாளிகளிடையே இவர் செல்வாக்குப் பெற்றதுடன், மற்ற ஆலை முதலாளிகளுக்கு வழிகாட்டியாகவும் இருந்து வெகு விரைவில் தொழிலாளர் பிரச்னையையும் தீர்த்துவைத்தார்.

டாடா நாகபுரியில் ஆலை ஆரம்பித்த பொழுது அவ்வட்டாரத்தில் ஆலைத்தொழில் அனுபவமுடைய தொழிலாளிகளே இல்லை என்னலாம். இந்த ஆலையில் கூலி சிறிது அதிக மாகக் கொடுபட்டதால், விவசாயத் தொழி லாளிகள் இதற்கு முன்வந்தனர். ஆனுல் அவர் களும் காலாகாலத்தில் தினசரி தவருமல் வேலை செய்ய வரமாட்டார்கள். அவ்விதப் பழக்கம் அவர்களுக்கு முன்னுல் கிடையாதல்லவா! தவிர வும் இந்தியாவிலுள்ள புராதன சமுதாயத் திட் டத்தின்படி அவரவர்களுக்கு ஏதோ தொழிலும் இருந்துவந்தது. ஆகவே அதை அலட்சியமாக விட்டுவிட அந்தக் காலத்தில் அவர்கள் துணிவு கொள்ளவில்லை. அப்படித்துணிந்து ஆலையில் ஈடு பட்டோரும் திருவிழாக் காலங்களிலும், கலியா ணம் முதலான காலங்களிலும் தங்கள் கிராமங் களுக்குப் போய்விடில், மாதக்கணக்கில் தங்கி விடுவர். அங்கே அலைந்து திரிந்துவிட்டுத் திரும் பினுல்கூட, அனுபவமுள்ள தொழிலாளர் கிடைப்பதன் அருமையால், எப்படியும் ஆலை களில் மறுபடியும் சேர்ந்துகொண்டு விடுவார்கள். ஆகவே அவர்களின் பொறுப்பின்மையைப் போக்கச் சாதனமே இல்லாமலிருந்தது. ஆலையை யடுத்தாற்போலவே குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்தால்கூட, அங்கே பல்வேறு பழக்க வழக்கமுள்ள சமூகத்தினரிடையே இருப் பதை அவர்கள் விரும்பவில்லை. தங்கள் சமூகத்

தினர் இருக்கும் பகுதிகளிலேயே வசிப்பதைப் பெரிதும் விரும்பினர்.

**கூர்லா**வில் ஏற்பட்ட 'ஸ்வதேசி மில்'லின் விஷயத்திலோ எனில் மேற்கூறிய விதமான இடையூறுகள் இன்னும் அதிகமாகவே யிருந்தன. பம்பாய் நகரத்தின் அந்தப் பகுதி அப்பொழுது போக்கிரிகளின் வாசஸ்தலமாக விளங்கிற்று. ஆகவே தொழிலாளர்கள் தம் ஓய்வு நேரங்களில், எப்படியும் சூதாட்டங்களில் தலைப்படத்தக்க சுற்றுணர்ச்சியேதான் பரவியிருந்தது. அதனால் வீண் கலவரங்கள் அநேகம் அங்கே நேரும். அது மட்டுமல்ல; அங்கே திருட்டையே தொழிலாகக் கொண்டவர்களும் பலர் குடியிருந்தனர். ஆகவே ஆலைச் சாமான்களைப் பத்திரமாகக் காப்பாற்றுவதிலும் சிரமம் இருந்து வந்தது.

ஆனால் டாடா சூரத், ப்ரோச் முதலான இடங்களுக்குத் தம் ஆட்களை அனுப்பி நல்ல யோக்கியதை யுள்ளவர்களை ஆலைத்தொழிலில் அமர அழைத்துக்கொண்டு வந்தார். அப்போது ஐக்கிய மாகாணத்தில் பஞ்சம் வேறு ஏற்பட்டிருந்தது. ஆகவே அங்கும் ஆலைக்கு ஆள் சேகரிப்பதற்காக, ஐக்கிய மாகாண சர்க்காருடன் கடிதப் போக்குவரத்துக்கள் செய்தார். பம்பாய் '**ஆலைகளின் சொந்தக்காரர்கள் சங்கம்**' அப்போது இப்பிரச்னையின் அவசியத்தை உணரா

விடினும், பிற்பாடு இப்படி டாடா பிற வட்டாரங்களிலிருந்து தொழிலாளரைக் கொண்டுவர எடுத்துக்கொண்ட கஷ்டத்தை உணர்ந்து பாராட்டினர்.

ஆலைகளில் வேலைசெய்ய முன்வந்த தொழிலாளிகளுக்கு வேண்டிய குடியிருப்பு வசதிகளையும், அவர்களின் குடும்ப நலன்களையும் முன்னுக்குக் கொண்டுவர, டாடா மிகவும் கவனத்துடன் தக்க திட்டங்கள் போட்டு ஏற்பாடுகள் செய்தார். ஆலைகளுக்குத் தவறாமல் வருகிறவர்களுக்குப் பரிசுகள் ஏற்படுத்தினார். வருஷங்கள் தோறும் 'போனஸ்'களும் கொடுத்தார். பரிசுகள் பெறும் தினத்தன்று தொழிலாளர்கள் நன்றாக உடுத்துக் கொண்டு கூடியிருப்பதைக் கண்டு டாடா மகிழ்ச்சி கொள்ளுவார். அன்று யாவருக்கும் விடுமுறையாகும். அதிக நாள் வேலையிலிருந்து வயது முதிர்ந்து விலகுபவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்தார். இது தவிர எதிர்பாராத விபத்துக்குள்ளாகிறவர்களுக்குச் சகாயநிதி ஏற்பாடுகளையும் இவர் செய்தார். பாட்டாளிகளுடைய க்ஷேமத்திலும் அவ்வளவு தூரம் டாடா கவனம் செலுத்தியதால், அவர்களும் வெகு விரைவில் தங்களுடைய சுபிட்சம், கம்பெனியின் சுபிட்சத்திலிருக்கிறதென்பதை உணர்ந்து தக்கபடி நடந்துகொண்டார்கள்.

டாடாவிற்குப் பின்னும் தொழிலாளர்களுக்குப் பல வசதிகள் ஏற்பட்டன. அவருடைய முக்கிய அபிலாஷையான உருக்குத் தொழிற்சாலை ஜாம் ஷெட்பூரில் ஏற்பட்டபின் அங்கிருந்த தொழிலாளர்களும் வெகு அன்புடன் நடத்தப்பட்டார்கள். பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவ வசதிகளும் பொருளுதவித் திட்டங்களுங்கூட அங்கே இருந்தன. தொழிலாளர்களின் பிள்ளைகள் படிப்பதற்காகப் பள்ளிக்கூடங்கள் இருந்ததோடு வேலை நேரங்களில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுவதற்குத் தக்க வசதிகளும் இருந்தன.

இன்றும் ஜாம்ஷெட்பூர் சென்று பார்க்கிறவர்கள், பிற நகரங்களுக்கு அது ஒரு மாதிரியாய் இருப்பதைக் காண்பார்களென்பதில் ஐயமில்லை. தொழிலாளருக்கென்று ஏற்பட்டுள்ள வரிசை வரிசையான ஒற்றைமாடி வீடுகளையும், மின்சார, தண்ணீர் வசதிகளையும், குழந்தைகளின் படிப்புக்காகத் தக்கதோர் உயர்தரப் பாடசாலையையும், ஓய்வு நேரங்களில் இன்புறத் தக்க காட்சிச்சாலைகளையும் காண்கையில் அவ்வளவு சௌக்கியமானதொரு சமுதாய சிருஷ்டிக்குக் காரணமான டாடாவை அவர்கள் நினைத்து மனமாரப் புகழத் தவறவே மாட்டார்கள்.

தொழிலாளரிடம் அவ்வளவு அன்புகொண்டிருந்த டாடா, தம் கீழிருந்த சிப்பந்திகளையும்

மறக்கவில்லை. அவர்களுக்காகவும் ஓய்வுநேரங் களில் படிக்கத்தக்க நூல் நிலையங்களையும், வாசக சாலைகளையும் ஏற்படுத்தினதுடன் அவர்களின் சுகவாழ்க்கையிலும் கருத்துக் கொண்டிருந்தார். பொதுவாக எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில், நவீன இயந்திர நாகரிகத் துக்குத் தக்க அறிவுள்ள தொழிலாளர் சமுதா யத்தை உண்டாக்கவேண்டுமென்பதே டாடா வின் லக்ஷியம் ஆகும்.

3192.

# 13

## இந்திய முன்னேற்றத்தில் டாடாவின் பங்கு

'டாடா தன் வாழ்வில் என்ன என்ன செய்தார். எவ்விதமான லாபகரமான தொழில்களை மேற்கொண்டார்' என்பதை மட்டும் நாம் கணக்கெடுத்து அவரை மதிப்பிட ஆரம்பித்தால் பெரும் தவறு செய்தவராவோம். அவரைச் சரிவர மதிப்பிட வேண்டுமாயின், 'அவர் என்ன செய்தார்' என்பதுடன் 'ஏன் அவைகளைச் செய்தார்' என்பதையும் கவனிக்கவேண்டும். அப்படிப் பார்ப்போமாயின் அவரது வாழ்வு இந்திய நாட்டின் ஊழியத்திற்காகவே அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது என்பதை மட்டுமன்றி, தேசீயப் புனர் உத்தாரண தேவதை அவரைத் தன் ஊழியராக்கிக்கொண்டு இந்தியாவில் விளக்கமுற்றிருந்தது என்பதையும் நாம் எளிதில் அறியலாகும். அவரை '**ஆலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த முதல் கர்ம யோகி**' என்று கூறுவதும்

மிகையாகாது. ஆகவேதான் அவர் அரசியல் சீர் திருத்தம், சமூகச் சீர்திருத்தம் முதலிய துறை களிலும் அப்போதிருந்த முற்போக்கான கக்ஷி களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தும், வெளியுலகிற்கு அது அவ்வளவாகத் தெரியாமலே யிருந்தது.

கைத்தொழிலில் ஈடுபட்ட ஒருவருக்குப் பணம் குவிப்பதைத் தவிர வேறு நோக்கம் இருக்க முடியுமா என்று கேட்போர், உலகில் இயங்கும் பற்றற்ற தொண்டின் முக்கிய தத்து வங்களை அறியாதவராவார்க ளென்பதில் எள் ளளவும் சந்தேகமில்லை. பணம் சேர்ப்பதையே அவர் தமது நோக்கமாகக் கொள்ளவில்லை. ஒரு முடிவை நாடிச்செல்லும் சாதனமாகவே இவர் அதைக்கருதினர். அம்முடிவு இந்தியக் கைத் தொழிலின் சுபிட்சந்தான் என்று சொல்லவும் வேண்டுமோ? பணத்தைக் குறியாகக்கொண்ட பலர் சரசமான பருத்தியைக்கொண்டு, பெரும் பாலும் செலாவணியாகும் மோட்டா துணியை உற்பத்தி செய்துவருகையில் டாடா மட்டும் இந்தியாவின் பெயர் நிலவும் வகையில் உயர்தரப் பருத்தியைக்கொண்டு மெல்லிய துணிகளை உற் பத்தி செய்து, 'மேல் நாடுகளுக்கு இந்தியா இளைத்ததன்று' என்று கூறும்வகையில், அவை களுடன் போட்டியும் இட்டார்.

டாடா தமது சொந்த வாழ்விலும் பேராசை யுற்றிருக்கவில்லை. எத்தொழிலை மேற்கொண்டா

லும் நேர்மையான வகையில் நியாயமான ஊதி யத்தைத் தவிர வேறு ஊதியத்தைப்பெறக் கூடாது என்பதையும் தம் வாழ்வில் அவர்காலத் தில் நடத்திக் காட்டினர். 'எம்ப்ரஸ் மில்' ஆரம் பித்த நாளையில் அவர் தமக்காக ஆண்டுதோறும் ரூ. 6000 எடுத்துக்கொண்டார். ரூ. 2000 மட் டுமே அவர் பெற்றுக்கொண்ட காலமும் உண்டு. 'தரம்ஸி மில்லை' விலை பேசித் தாம் பெற்றுக் கொண்டு அதை 'ஸ்வதேசிக் கம்பெனி'க்கு விற் கையில் 24 மணி நேரத்தில் அவர் 2 லக்ஷ ரூபாய் லாபம் அடைந்திருக்க முடியும். ஆனல் வாங்கின விலைக்கேதான் அக்கம்பெனிக்கு அதை விற்ருர். தவிரவும், ஆலையை நிர்வகிக்கும்'ஏஜண்டு'களுக்கு உற்பத்தியில் ஒரு பவுண்டுக்குக் காலணு கமிஷன் கொடுக்கும் வழக்கத்தையும் இவர் அறவே ஒழித் தார். அதற்குப் பதிலாக லாபத்தில் 10 சத விகி தம் என ஏற்படுத்திஞர். ஆலைகளின் ஆரம்ப தசையில் இந்த ஏஜண்டுகளுக்குக் கொடுக்கப் பட்டுவந்த கமிஷன் பாரத்திஞலேயே, பல ஆலை கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதை டாடா ஒழித்தார். இப்படிப்பட்ட முறைகளால் செல்வம் குவிப்பதில் டாடா இச்சை கொள்ளாத வர் ஆஞர். இதுவன்றிக் குவித்த செல்வத்தை எவ்விதம் செலவழிக்க வேண்டுமென்பதற்கும் இவர் உதாரண புருஷராஞர்.

நாட்டின் நிரந்தர நலனைப் பகுத்து அறியக் கூடிய அறிவு இல்லாமல் வெறும் தர்ம எண்ணம்

மாத்திரம் டாடாவிடம் இருந்திருக்குமேயானால் இவருக்குமுன் பல தனவான்கள் செய்ததைப் போல் இவரும், நாலைந்து அன்னசத்திரங்களுக்கும், கோயில் குளங்களில் கூட்டமாக இருக்கும் சோம்பேறிகளுக்கும், தமது செல்வத்தை விரயம் செய்து போயிருப்பார். ஆனால் இவரோ புதிய அறிவியல் துறையில் அதிகம் படிக்கப் பொருள் இன்றி ஏழையாய் இருந்த அநேகரை ஆதரித்து வந்தார். அதற்காக 1892-ஆம் ஆண்டில் ஒரு திட்டம் ஏற்படுத்தி அதன்படி ஆண்டுதோறும் சில இந்திய இளைஞர்களை (ஐ. சி. எஸ். போன்ற உயர்தர நிர்வாகப் பதவி பெறுவதற்கும் வைத்தியம், பொறியியல் முதலிய துறைகளில் உயர் தரக் கல்வி பெறுவதற்கும்) இங்கிலாந்து முதலிய மேனாடுகளுக்கு அனுப்பிவந்தார். அவர்கள் தங்கள் படிப்பு முடிந்து சம்பாதிக்கையில் அத் திட்டத்தில் தாங்கள் பெற்ற பொருள்உதவியைத் திருப்பிச் சேர்ப்பித்துவிட வேண்டும். இவ்விதம் ஏற்பாடுகள் செய்ததால் அந்த நிதியும் நிரந்தரமாக இருந்ததுடன் அதிகமான இந்தியர்களும் முன்னணிக்கு வர முயல முடிந்தது. வெள்ளை நிறத்தார் கறுப்பர்களைவிட அறிவிற் சிறந்தவர்களே என்று கருதப்பட்ட காலம் அது. டாடா அக்கருத்தை அறவே வெறுத்தார். ஆகவேதான், தாம் ஏற்படுத்திய திட்டத்தின் மூலம் வெற்றி பெற்றுவந்த இளைஞர்களால் வெள்ளையருக்குக் கறுப்பர் எவ்விதத்திலும் இளைத்தவர்



3192

களல்லரென்பது ருசுப்பிக்கப்பட்டதாகத் திருப்தி கொண்டார். தவிரவும், டாடா தம் ஆலைகளிலும், சில படித்த இளைஞர்களைப் பொறிகளில் பயிற்சி பெறுவதற்காக ஆண்டுதோறும் சேர்த்துக் கொண்டார். மூன்றாண்டுகள்வரை அவர்களுக்குச் சொற்ப ஊதியம் கொடுத்துவந்ததோடு அதன் பின் தம் தொழிற்சாலையிலேயே அவர்களை நல்ல சம்பளத்தில் அமர்த்திக்கொண்டும் வந்தார். சில பேர்களுக்கு மட்டும் ஏதாவதொரு நாளில் தானதருமங்கள் செய்வதைவிட நிரந்தரமாகத் தாங்களே சம்பாதித்துக்கொள்ளும் நிலைமைக்கு அவர்களைக் கொண்டுவருதல் சிறப்புடைத் தல்லவா? தான தருமங்கள் செய்வதைக் காலத்திற்குத் தக்க முறையில் அறிவோடு, விசாரணை செய்து செய்யவேண்டும் என்று டாடா கருதிவந்தார். "துணி உற்பத்திக்கு எவ்வளவு அறிவு, விசாரணை இவை வேண்டுமோ அவ்வளவும் தான தருமங்களை நேரிய முறையில் செய்யவும் வேண்டும்" என்று தம் நண்பர்களிடம் இவர் அடிக்கடி கூறுவாராம். "இந்திய வறுமைக்குக் காரணம் இந்தியருக்குத் தக்க விருத்தி வசதிகள் ஏற்படுத்தப்படாமலிருப்பதும், அறிவியல் முறைக்கொப்பக் கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படாமலிருப்பதுமே" என்று அவர் கருதினார். அத்துடன் பல நாடுகளுக்கும் தாம் சென்றிருந்த அனுபவத்தாலும் தொழில் உலகில் தாம் நடத்தவேண்டி ஏற்பட்ட போராட்ட அனுப

வங்களாலும், இந்தியா இரும்பு, உருக்கு இவை யிரண்டையும் உற்பத்தி செய்துகொள்ளாமலும் தன் மக்களுக்கு அறிவியல் முறையில் தக்க கல்வி யளிக்காமலும் இருக்கும்வரை தற்காலத்தில் அது முன்னணிக்கு வரமுடியாதென்று அவர் தெளிவாக அறிந்திருந்தார். பம்பாயைப் பொறுத்தவரை சுமார் 1500 மைல்களுக் கப்பாலிருந்து அதற்கு நிலக்கரி கொண்டு வரப்பட்டமைக்குத் தக்க மாற்றுக் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் இவர் உணர்ந்திருந்தார். பிற்காலத்தில் ஜாம்ஷெட்பூர் இரும்புத் தொழிற்சாலையும், பெங்களூர் விஞ்ஞானக் கழகமும், பம்பாய் மின்சாரத் திட்டமும் ஏற்படக் காரணமாயிருந்தவை அவருடைய அக்கருத்துக்களே என்று கூறவேண்டும்.

தவிரவும் எந்தக் கம்பெனிக்காரர்களும் ‘தங்களது’ என்று சில வியாபார தந்திரங்களை வைத்துக் கொண்டிருப்பார்கள். அவைகள் மிகவும் ரகசியமானவை. டாடா அப்படிப்பட்ட வியாபார ரகசியங்களைப் பொருட்படுத்தினதேயில்லை. தாம் கையாளும் எல்லா முறைகளையும் இந்திய வியாபாரிகள் அனைவருக்கும் பகிரங்கமாகத் தெரிவிப்பார். இதிலிருந்தே அவர் இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்தையே முதலில் கவனிப்பவரென்பதும் தமது கம்பெனியின் நலத்தை மாத்திரம் கவனிப்பவரல்ல ரென்பதும் எளிதில் தெரியும்.

## 14

## இந்தியக் கைத்தொழில்களுக்கு இடையூறும், டாடாவின் எதிர்ப்பும்

ஒரு நாட்டின் கைத்தொழில்கள் ஆரம்ப தசையில் இருக்கும்போது சாதாரணமாக அந்த நாட்டு சர்க்கார் அதற்கு வேண்டிய பண உதவிகளைச் செய்து, பிறநாட்டுப் பொருள்களின் போட்டியிலிருந்து தடுக்கப் பாதுகாப்புகளையும் ஏற்படுத்தி வேறு தேவையான சௌகர்யங்களையும் செய்வார்கள். தனிப்பட்ட நபர்கள் எவ்வளவுதான் தொழிற் திறமை படைத்திருந்தாலும், பொதுவான சில சௌகர்யங்களைச் சர்க்கார் ஏற்படுத்தித் தரக் கடமைப்பட்டிருக்கின்றது. அவைகளைச் செய்துதரத் தவறிவிடுமாகில், அந்தச் சர்க்காரைப் பொறுப்புள்ளதெனக் கூறமுடியாது. தவிரவும் அவ்விதம் நேருமேல் அந்தந்தத் தொழிலை மேற்கொண்டிருப்பவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே அதனால் ஏற்படும் இடையூறுகளை எதிர்த்துப் போராட வேண்டி

யிருக்கும். இந்தியக் கைத்தொழிலின் ஆரம்ப நாட்களில் அவ்விதமான இடையூறுகளெல்லாம் நேர்ந்தன. சர்க்காரோ தனது பொறுப்பை உணர்ந் திருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே தொழிலில் ஈடுபட்டிருந்தோரே அப்போது தங்கள் சொந்தப் பொறுப்பில் பல போராட்டங்களை நடத்தின மைக்குப் பல கதைகளும் சான்றுகளும் நம் நாட்டில் உள்ளன.

1885-ஆம் ஆண்டிற்குப் பின் ஹாங்காங் கிற்கும் ஷாங்ஹேய்க்கும் ஏராளமாக இந்திய நூல் ஏற்றுமதியாயிற்று. அப்போது இந்தியாவி லிருந்து சீனு, ஜப்பான் இந்நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்த கப்பல்களெல்லாம் 'பி. அண்டு ஓ' என்னும் ஆங்கிலக் கம்பெனியையும், 'ஆஸ்திரியன் லாயிடை'யும் 'ருபாடினே' வென்னும் இத்தாலியக் கம்பெனியையும் சேர்ந்தவைகளாகும். சிலநாள் இவை தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டதன் பின், மூன்றும் ஒன்று சேர்ந்து கொண்டு, நூல் ஏற்றிக்கொண்டு போவதற்கு வாடகையை அபரிமிதமாக உயர்த்திவிட்டன. பம்பாய் மில் முதலாளிகள் எவ்வளவு கேட்டுக் கொண்டும் ஒன்றும் பயன்படவில்லை. அதனுல் பாதிக்கப்பட்ட ஆலைகளுள் டாடாவினுடைய தும் ஒன்றாகும். ஆகவே டாடா ஜப்பானுக்குச் சென்று 'நிப்பன் யூசென் கெய்ஷா' என்னும் ஜப்பானியக் கப்பல் கம்பெனியுடன் ஒப்பந்தம்

செய்துகொண்டு அதன் கப்பல்களில் சரக்கு அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தார். அதன்பின் அமெரிக்கா வழியாக இங்கிலாந்து சென்று அங்கே **'அன்னிபாரோ' 'லிண்டிஸ்பார்ன்'** என்னும் இருகப்பல்களை வாடகைக்குப் பெற்று, ஜப்பானியக் கப்பல்கள் இரண்டோடும் சேர்த்து, போக்குவரத்தை ஆரம்பித்தார். பம்பாய் மில் முதலாளிகள் பலர் அவருடைய புதுக் கம்பெனிக் கப்பல்களிலேயே தங்கள் சரக்குகளை அனுப்புவதாக உத்தரவாதமளித்தனர். இப்படி அந்நியக் கம்பெனிகளின் கொம்மாளத்தை அடக்க டாடாவின் முயற்சி வெற்றிபெற்றமையை நாட்டினர் பாராட்டினர். எதிரிக் கம்பெனிகள் மூன்றும், மிக்க வலுக் கொண்டவைகளாக இருந்ததுடன் அந்நாட்டுச் சர்க்கார்களின் ஆதரவுகளையும் பெற்றிருந்தன. ஒரு தனி மனிதராகிய டாடாவின் முயற்சி வெற்றிபெற்றதில், அவைகளது வயிற்றெரிச்சல் அதிகமாயிற்று. ஆகவே இந்தியர் அடைந்த பெருமகிழ்ச்சியை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டன.

டாடாவின் புதுக்கம்பெனி ஒரு டன் கனமுள்ள நூல் கட்டுக்கு ரூ. 12 வாடகை ஏற்படுத்தியிருந்தது. அந்நியக் கம்பெனிகள் கட்டணத்தை வேண்டுமென்றே ரூ. 2 ஆக்கிப் பின் ரூ. 1 ஆக்கி, ஒரு சமயம் இலவசமாகவும் கொண்டு செல்லத் தலைப்பட்டன. அவ்வளவுடன் நிற்க

வில்லை. கப்பல் இன்ஷ்யுரன்ஸ் மார்க்கெட்டில் டாடாவின் கப்பல்கள் நூல்கொண்டு செல்லத் தக்க பாதுகாப்பற்றவை யென்னும் பொய் வதந்தியையும் பரப்ப முயற்சித்தன. இதைக் கண்ட டாடா மனம் வெகுண்டார். இந்திய சர்க்காரிடமும், இந்தியா மந்திரியிடமும் புகார் செய்தார். ‘வருங்காலத்தில் ஏதாவது யுத்தம் ஏற்பட்டால், தங்களுக்கு விரோதியாகக்கூடிய நாட்டுக் கம்பெனிகளிடம் கூட ஆங்கிலக் கம்பெனிகள் உறவு கொண்டாடத் தயங்குகின்றதில்லை. ஆனல் ஏழை இந்தியாவிலெனிலோ ஏதாவது கப்பல் கம்பெனிகள் ஏற்படின் அவைகளை முளையிலேயே கிள்ளியெறியவும் அவை தவறுவதில்லை’ என்று கூறும், பல பிரசுரங்களை இவர் வெளியிட்டார். ஆங்கிலேயருடைய நலன்களுக்குப் பாதகம் விளையுமென்று கண்டு, இந்திய சர்க்காரும், இந்தியா மந்திரியும் கையை விரித்துவிட்டனர். இந்த ஏமாற்றம் ஒருபுறமிருக்க உத்தரவாதமளித்த முதலாளிகள் நாளடைவில் அவரைக் கைவிட்டு, தற்காலிகக் குறைந்த கட்டணத்தைப் பெரிதென்றெண்ணி, அந்நியக் கப்பல்களில் சரக்கு அனுப்பத் தலைப்பட்டமை டாடாவுக்கு அதைவிட ஏமாற்றம் அளித்தது. இதனல் ஏராளமான பொருள் நஷ்டமடைந்தும், டாடா வருந்தவில்லை. இந்தியர்கள் ஒற்றுமைப்பட்டால் என்ன சாதிக்க முடியுமென்பதை ஒரு முறையேனும் இந்தியர்

கண்முன் எடுத்துக் காட்டிவிட்டதற்காக இவர் மகிழ்ச்சியே கொண்டார்.

லங்காஷையர் துணிகளுக்குக் கொஞ்சம் சலுகை காட்டுவதற்காக, 1895-இல் இந்திய சர்க்கார், இந்திய மில் துணிகளின் பேரில் வரி விதித்தனர். இந்திய மில்களில் லாபம் அதிகமாக வருகிறதென்றும், அதனுல் வரி விதித்திருப்பது சரியே என்றும் வாதித்தனர். ஆனுல் டாடாவோ இந்திய மில்களின்பேரில் வரி விதிக்கத்தக்க அவ்வளவு லாபம் அவைகளிலிருந்து வரவில்லை என்று சர்க்காருக்குத் தெரிவித்ததோடு அதை ரத்து செய்யவேண்டி, அப்போது இந்தியா மந் திரியாக விருந்த ஜார்ஜ் ஹாமில்டனையும் பேட்டி கண்டார். அத்துடன் உண்மையிலேயே எவ் வளவு லாபம் வருகிறதென்று கணக்கெடுக்கவும் தம் காரியதரிசியான பெர்ஜோர்ஸி பாஷாவை ஏற்பாடு செய்தார். அவர் பம்பாய் மில்கள் எல்லாவற்றின் கணக்குகளையும் பார்த்து அவை களிலிருந்து சராசரி வருமானம் 6 சத விகிதமே என்று நிர்ணயித்தார். இதற்கு முன் இப்படி லாபம் நிர்ணயிப்பதற்கு வேண்டிய சரியான விகிதமே அனுஷ்டானத்தில் இல்லை. ஆகவே அவருடைய யாதாஸ்தை அச்சிட்டு அர சாங்கத்தாருக்கும், ஆலைக்காரர்களுக்கும் வழங் கினர். பம்பாய் ஆலை முதலாளிகள் சங்க மும் அதை ஆதரித்து, வரியை ரத்து செய்

யக் கோரியது. டாடா தமது மில்களின் வருமானத்தைப் பொறுத்தவரை அவ்வரியைக் கொடுக்கத் தக்க நிலையில் இருந்தும், இந்திய ஆலைகளின் பொதுவான நலனுக்காகவே அவ்வளவு தூரம் அவ்விஷயத்தில் சிரத்தை கொண்டார்.

வெள்ளிக்கும் தங்கத்துக்கும் உள்ள மாற்ற மதிப்புக்குத் தக்கபடி ரூபாயின் மதிப்பும் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்ததால் 1893-ல் நோட்டுக்களின் மதிப்பை நிலைக்கச் செய்யச் சர்க்கார் முயற்சித்தது. அவ்விதம் செய்வதால் இந்தியாவின் அந்நிய நாட்டுக் கடன் உயர்ந்து விடுவதுடன், பருத்தி உற்பத்தித் தொழிலும் வெகுவாகப் பாதிக்கப்படும். ஆகவே டாடா அம்மசோதா யோசனையற்ற தென்றும், இந்தியக் குடியானவர்களுக்கு மிகவும் தீங்கு விளைவிப்பதென்றும் தக்க பல காரணங்களுடன் காட்டி அதைச் சட்டமாகாதவாறு செய்யக் கோரி, பத்திரிகைகளில் பலமுறை தெரிவித்தார். இங்கிலாந்திலுள்ள '**ஸ்டேடிஸ்ட்**' என்னும் பத்திரிகைகூட அவர் வாதத்தை முழுவதும் ஒப்புக் கொள்ளாவிடினும், அம்மசோதா சாகவேண்டியதே என்பதை வற்புறுத்திற்று. ஆனால் அவருடைய வாதம் வெற்றிபெறாதது வருந்தத் தக்கதே

# 15

## சுற்றுப் பிரயாணங்கள்

வாணிகம் மேற்கொண்டிருப்பவர்கள் பல ஊர்களுக்கும் சென்று அங்கே செலாவணியாகக் கூடியவைகளையும் அங்கிருந்து தமது ஊருக்குக் கொண்டுவரக் கூடியவைகளையும், அறிந்து நடந் தால்தான் அவர்களது வாணிகம் முன்னேறி வரும். இப்படிப் பல ஊர்களுக்கும் வணிகர் செல் லும் பழக்கம் பழங்காலந் தொட்டு நம் நாட்டில் இருந்துவருகிறது. ஆனால் இயந்திர யுகம் உலகில் ஆரம்பமாகி, குவியல் குவியலாகப் பொருள் உற் பத்தி செய்யப்படுகையில் பல ஊர்களுக்குப் போவதுமட்டும் போதாததாகி உலகின் பல நாடு களுக்கும் வியாபாரிகள் செல்லத் தலைப்பட்டனர். அதற்குத் தக்கபடி 'ஞாலம் நடுங்க வரும் கப்பல் களு'ம் தோன்றின. இப்படிப் பல நாடுகளுக்கும் சென்று வியாபார அநுபவம் பெறவேண்டியதன் அவசியத்தை இந்தியக் கைத்தொழில் யுகத்தின் பிதா உணராமலிருப்பாரா? ஆகவே டாடா உலகி

லுள்ள பல நாடுகளுக்குமே — ஏன்! எல்லா நாடுகளுக்குமே - பலமுறை சென்று அவ்வப்போது அங்கங்கே தொழில் அபிவிருத்தியில் ஏற்பட்டிருந்த முற்போக்கான முறைகளை அறிந்துவந்தார்.

டாடாவின் முதல் பிரயாணம் கிழக்கு நாடுகளுக்கே என்று முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலில் இறங்கிய உடன், சீனு, ஜப்பான் முதலான கீழ் நாடுகளுக்கும், அதன்பின் 'ஏஷியாடிக் பாங்கிங் கார்ப்பொரேஷ'னின் சார்பாக இங்கிலாந்திற்கும் இவர் சென்றிருந்தார் என்பதை முன் கூறப்பட்டவைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

'எம்ப்ரஸ் மில்' தொடங்குவதற்கு முன் இவர் மேல்நாடுகளில் விரிவாகச் சுற்றுப் பிரயாணம் செய்தார். எகிப்து, பாலஸ்தீனம், சிரியா, துருக்கி, ரஷ்யா முதலான நாடுகளின் வழியாக இங்கிலாந்து சென்ருர். இந்தச் சுற்றுப் பிரயாணத்தின்போது இவர் எழுதிவைத்திருந்த சில குறிப்புக்களிலிருந்து இப்படிச் சுற்றுப் பிரயாணம் செய்வதில் இவர் எவ்வளவு மகிழ்ச்சியும், அங்கங்கே காணப்படும் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் அறிந்துகொள்ளுவதில் எவ்வளவு ஆர்வமும் கொண்டிருந்தார் என்பது நன்கு விளங்குகிறது. அத்துடன் அங்கிருக்கும் மக்கள் சமூக, பொருளாதார, மத விஷயங்களில் கொண்டிருந்த சிரத்தை, நம்பிக்கை முதலியவைகளையும்

இவர் பாராட்டினதன்றி அவர்களது மடமை யையும் எவ்விதம் பெருந்தன்மையுடன் மிகைப் படுத்தாமல் ஒதுக்கினுர்என்பதையும் அறியலாம். ஜெருசலத்திற்கு இவர் ஒரு முறை செல்ல நேர்ந்த காலே ஏசுநாதனேச் சிலுவையில் அறைகையில் உபயோகிக்கப்பட்ட ஆணிகளென ஓர் பாறை யில் அடிக்கப்பட்டிருந்த சில ஆணிகளே இவருக் குக்காட்டினர். அந்த ஆணிகள் அப்பாறையி னூடே சென்றுகொண்டிருப்பதாகவும் அவை முழுவதும் மறுபக்கம் வரும் அந்நாளே **‘தீர்ப்பு நாள்’** எனவும் கூறினர். இதைப் பற்றி டாடா குறிப்பிடுகையில் பாறையி னூடே செல்லும் தங்கள் யாத்திரையில் அந்த ஆணிகள் கால் அங்குலத்திற்கு மேல் சென் றிருக்கமாட்டா வென்றும், அந்த விசையில் அவைகள் செல்லுமானல் தமது அபிலாஷைகள் நிறைவேறுவதற்குள் தீர்ப்பு நாள் குறுக்கிடா தென்றும், அதற்காகக் கடவுளுக்குத் தமது வந்தனங்களே அளிப்பதாகவும் எழுதியிருக்கிருர். இதிலிருந்து டாடாவின் ஹாஸ்ய உணர்ச்சி வெளியாகிறது.

பல நாடுகளின் வழியாகச் செல்லும்போது வெறும் காட்சிகளே மட்டும் டாடா ரசித்துச் சென்றதாகக் கருதுதல் தவறு. இவரது வியா பார அறிவும், கூரிய புத்தியும், விஷய ஆர்வமும் இவரை வெறும் ரசனேயுடன் செல்லவிடுமோ? அந்தந்த நாட்டு வியாபார வசதிகளேயும்,

தேவைப்படும் பொருள்களின் தன்மைகளையும், அங்கே விளையும் இயற்கைப் பொருள்களைப் பற்றிய விவரங்களையும் வெகு நுணுக்கமாக அறிந்து தான் இவர் மேலே செல்வார். எகிப்தில் இவர் கண்ட உயர்ந்த ரகப் பருத்தியை இந்தியாவில் பயிரிட முயற்சிகொண்டதும் தமது ஓய்வு நேரங்களில், ஜப்பானில் தாம்கண்ட முறைப்படி தேனீ வளர்க்க ஏற்பாடுகள் செய்ததும் இவர் எவ்வளவு கவனத்தோடு தம் பிரயாணத்தை மேற்கொண்டார் என்பதை விளக்கும்.

தவிரவும், இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு இந்தியாவில் உருக்கும், இரும்பும் உற்பத்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை இவர் உணர்ந்ததும் இப்பிரயாணங்களிலுல்தான். அதன்பின் அம்மாதிரி உற்பத்தித் திட்டங்களைப்பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க இவர் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் முதலான நாடுகளின் வழியாக உலகையே சுற்றியும் வந்தார். அந்த அந்த நாடுகளில் உள்ள எந்த ஊர்களுக்குப் போனாலும், டாடா முதன் முதல் அந்த ஊர்ச் சந்தைக்குத்தான் போவாராம். இவர் மேற்கொண்ட பிரயாண சந்தர்ப்பங்கள் அநேகமாக **உலக அறிவியல் கண்காட்சி** நடைபெறும் சந்தர்ப்பமாகவே யிருந்ததால், அவைகளை இவர் பார்க்கத் தவறியதில்லை. **பாரிஸ், டுசல்டார்ப்** முதலிய இடங்களில் நடந்த **கண்**

காட்சிகளுக்கு இவர் சென்றமை குறிப்பிடத் தக்கன. ஆண்டுதோறும் அறிவியலில் ஈடுபட்டிருப்போர் என்ன என்ன புதுமைகளை உலகுக் களிக்கின்றனர் என்பதை அவ்வப்போது டாடா விரைவில் அறிந்து அவற்றைப் பயன் படுத்திக்கொள்ளத் தயங்கினதில்லை. அதோடு ஒவ்வொரு நாட்டுமக்களும் தங்களிடம் கொண் டுள்ள தனிப்பட்டதோர் சிறப்புக் குணத்தையும் டாடா கவனிக்காமலிருக்கமாட்டார். அமெரிக்கர், கைத்தொழில்களை ஏற்படுத்துவதில் கண்மூடித் தனமாகப் பணத்தைக்கொட்டிய துணிச்சலையும், ஜெர்மானியர் சிறிய நுணுக்கங்களையும் அறிந்து கொள்வதில் காட்டும் சிரத்தையையும், ஜப்பான் வெகு வேகமாக மேல்நாட்டுடன் போட்டி இட்டுக்கொண்டு எல்லாத் துறைகளிலும் உதய ஞாயிறென்ன முன்னேறி வந்ததையும் அவர் மிகவும் பாராட்டினர். அரசியல் பொருளாதார விஷயங்களில் சரியான அபிப்பிராயங்களைக் கொள்ளவும், டாடாவுக்கு அவரது லோக சஞ்சாரம் மிகவும் பயன்பட்டது.

தாம் காணும் தேசங்களிலுள்ள புதிய புதிய வீட்டுச் சாமான்களையும், பழமரங்களையும், செடி முதலானவைகளையும் இந்தியாவிற்குக் கொண்டு வந்து புகுத்துவதில் எப்போதுமே டாடாவுக்கு விருப்பம். அவ்வப்போது அவர் வாங்கிய பொருள் கள் நீண்ட நாள் வரையிலும் அவரது குடும்பத்

தாரால் காப்பாற்றப்பட்டன. சில புதிய செடிகளை அவரே தமது நவ்சாரி தோட்டத்தில் நட்டு, வளர்க்கப் பல முயற்சிகள் செய்திருக்கிறார். தவிர உலகைப் பன்முறை அவர் சுற்றியதால், விசாலமான அறிவைப் பெற்றிருந்ததுடன் அதற்கொப்ப இந்தியாவில் என்ன என்ன செய்யப்பட வேண்டுமோ அவைகளும் அவருக்குப் புலப்பட்டன.

## 16

## எண்ணங்கள் உருவாதல்

சுமார் இருபது ஆண்டுகள் தாமே தொழி லில் கண்ணும் கருத்துமாக இருந்தது தவிர அதன்மேல் இனித் தம்மேற்பார்வை யில்லாவிட் டால் கூட அதைச் சரிவர நடத்தத் தக்க பொறுப்புள்ள சகாக்களும் டாடாவுக்கு இப் போது கிடைத்து விட்டனர். இதற்குள் இவர் பல நாடுகளையும் சுற்றி வந்துவிட்டார். ஆகவே இனித் தமது பல நாட்களின் அபிலாஷைகளான, இரும்பு, உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தல், அறிவியலில் ஆராய்ச்சிக்கான சௌகர்யங்களை ஏற்படுத்தல், பம்பாய் மின்சார உற்பத்தித் திட் டம் போடுதல் ஆகிய மூன்று காரியங்களில் கவனம் செலுத்தத் தக்க சமயம் வந்துவிட்ட தாக இவர் எண்ணினார்.

ஆகவே பெர்ஜோர்ஜி பாஷாவை அறிவியல் துறையில் ஆராய்ச்சி சாலை யொன்றை ஏற்

படுத்தத் திட்டம் தயாரித்துவரும்படி மேல் நாடு களுக்கு அனுப்பினர். சுமார் பதினெட்டு மாத காலம் பாஷா இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், சுவிட்ஸர்லாண்ட் முதலான நாடு களுக்குச் சென்று ஆங்காங்குள்ள மேதாவிகளி டம் அதற்கான யோசனைகளை அறிந்துகொண்டு இந்தியா திரும்பினர். கல்வியில் மற்ற துறை களில் ஆராய்ச்சிக்கான வசதிகள் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டாலும் முக்கியமாக அறிவியலில் ஆராய்ச்சி செய்ய விரும்பும், கல்லூரியில்தேறிய மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சியைச் செய்வதற் காகத் தக்க சாதனங்களை ஏற்படுத்தித் தருவதே முக்கிய நோக்கமென்று அப்போதே கண்டு அப் படிப்பட்டதோர் ஆராய்ச்சிக் கழகத்தை ஏற் படுத்துவதற்காகச் சுமார் 30 லக்ஷ ரூபாய் மதிப் புடைய தம் சொத்துக்களை அதற்காகவே இவர் எழுதி வைத்தார். இது 1898-ஆம் ஆண்டு செப்டம்பரில் பகிரங்கமாயிற்று. 'பாத்திர மறிந்து பிச்சை இடு' என்று கூறுவதுண்டு. இவ்வளவு பெருந் தொகையைத் தக்கதோர் தருமத்திற்கு எழுதிவைத்த டாடாவின் கொடை யை அப்போது புகழாதார் இல்லை. இப்போதும் புகழாதார் இல்லை. அவ்விதமானதோர் ஆராய்ச் சிக் கழகம் ஏற்படுவதால், பிற்காலத்தில் இந்தி யக் கைத்தொழில் எவ்வளவு நலனடையும் என் பதைக் குறித்து யாவரும் மகிழ்ச்சி கொண்ட

னர். நாட்டிலுள்ள பத்திரிகைகள் அவரைப் பல படியாகப் புகழ்ந்து எழுதினவென்று கூறவும் வேண்டுமோ? அப்பொழுது பம்பாயில் கவர்ன ராக இருந்த '**லார்ட் ஸாண்ட்ஹர்ஸட்**' என்பாரும் தமது உத்தியோக காலம் முடிவதற்குள் அவ் விதக் கழகம் ஏற்பட்டுவிடுமெனத் தாம் நம்பு வதாகவும் கூறினர்.

சில மாதங்களுக்குள் வைசிராய் பதவி யேற்கப் பம்பாய் வந்திறங்கிய **கர்ஸான் பிரபு** வையும், டாடாவும் இன்னும் சில பிரமுகர்களும் பேட்டிகண்டு தங்கள் ஆராய்ச்சிக் கழகம் விரை வில் முடிவதற்கான உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டனர். அதன்பின் அக்கழகத்தை எங்கே நிர்மாணிப்பது என்ற பிரச்னே எழுந்தது. டாடா முதலில் பம்பாயிலேயே அது இருக்க வேண்டு மென விரும்பினர். ஆனல் பம்பாயின் சீதோ ஷ்ண நிலைமை அவ்வளவாக அதற்கு எடுத்ததல்ல வென்று கருதப்பட்டதாலும், மற்றும் சில கார ணங்களாலும், அதே சமயம் மைசூர் மஹாராஜா அக்கழகத்தைப் பங்களூரில் நிர்மாணிக்கவேண்டு மென்று கோரி மிக்க தேசபக்தியுடன் அதற்காக 300 ஏகர் நிலத்தையும், ஐந்து லட்ச ரூபாய் நன் கொடையையும் அளிக்க முன்வந்ததாலும், பம்பாயை விடுத்துப் பெங்களூரிலேயே அதை நிர்மாணிப்பது என்று தீர்மானித்தனர். பெங்க ளூரின் சம சீதோஷ்ண நிலைமை வெகுவாக நல

மானதென்றும் கருதினர். மைசூர் மகாராஜாவின் நன்கொடையோடு மத்திய சர்க்கார் அளித்த $2\frac{1}{2}$ லக்ஷ ரூபாயையும் மற்ற நன்கொடைகளை யும் சேர்த்துப் பார்த்ததில் 9 லக்ஷ ரூபாய் கட்ட டம் முதலானவைகள் கட்டுவதற்குக்கிடைத்தது. ஆசிரியர்களின் சம்பளத்துக்கும் மற்ற நிர்வாகச் செலவுக்குமாக டாடாவின் தர்மத்திலிருந்து ஆண்டுதோறும் 2 லக்ஷ ரூபாய் எதிர்பார்த் தனர். இவ்வளவு ஏற்பாடுகளும் ஆனபின் 1899-ஆம் ஆண்டு அக்டோபரில் அனுப்பிய அழைப்புக்கிணங்க டாடா சிம்லா சென்று வைசிராயிடம் தமது உத்தேசத் திட்டத்தைப் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தார். வைஸ்ராய் தமது சகாக்களுடன் யோசனை செய்து ஆராய்ச்சிச் சாலையைச் சர்க்காரின் நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளத்தக்க சட்ட திட்டங்களை விரைவில் செய்வதாக உறுதிகூறி அதன் வெற்றிக்கு ஆவன செய்வதற்கும் முன்வந்தார். ஆகவே தாம் அம் முயற்சியைத் தொடங்கிய பதினைன்கு மாதங் களுக்குள்ளேயே தம் உத்தேசத் திட்டத்தைச் சர்க்கார் ஒப்புக்கொண்டதைக் கண்டு பெரு மகிழ்ச்சியுடன் சிம்லா விட்டு டாடா ஊர் திரும்பி னார். நிற்க, டாடாவிற்குப் புகழிலும் பற்றில்லை என்பதை விளக்க ஈண்டு ஒரு விஷயம் கூற வேண்டும். ஆராய்ச்சிச் சாலைக்கு '**டாடா கழகம்**' எனப் பெயரிடலாமென்ற யோசனை வந்தது. அப்போது டாடா தம் பெயர் அதில்

விளங்க வேண்டுவது முக்கியமல்ல வென்றும், கழகம் சரிவர நடப்பதே முக்கியமான தென்றும், தம் பெயர் அதிலிருந்தால், அதற்கு உதவி செய்பவர் யாவருக்கும் அஃதே போன்றதோர் உணர்ச்சி இருக்கத்தான் செய்யுமென்றும் கூறி, அந்த யோசனையை நிராகரித்துவிட்டார். அத்துடன் அதன் நிர்வாக சபையிலும், தமக்கும் மற்ற அங்கத்தினர்க்குள்ள சரிசம உரிமையே அல்லாமல் எவ்வித விசேஷ உரிமையும் வேண்டாமென்றும் கூறிவிட்டார். டாடாவின் இவ்வித மேதை அவருடைய புகழை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

இரண்டாவதாக, இந்தியாவில் இரும்பு, உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டிய தன் சம்பந்தமாக டாடா எவ்வளவு ஊக்கம் கொண்டிருந்தார் என்பதும் முன்பே சொல்லப்பட்டது. அவர் டுசெல்டார்ப் கண்காட்சிக்குச் சென்றிருந்த போது, இரும்பு, உருக்கு மின்சாரம் இவைகளைக்கொண்டு ஜெர்மானியர் எவ்வளவு முற்போக்கான பொறிகளை உற்பத்தி செய்திருக்கின்றனர் என்பதைக் கண்டு பெரிதும் ஆச்சரியமுற்றார். இந்தக் கண்காட்சிச் சாலையை இவர் பார்த்துவந்தது இவர் இந்தியாவில் தக்கதோர் உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று கொண்டிருந்த எண்ணத்தை வலுப்படுத்தியது. தமது பலதிறப்பட்ட அலு

வல்களுக்கிடையிலும் அரசாங்கத்தாரால் அவ்வப்போது வெளியிடப்படும் சர்வே யாதாஸ்துக்களையும், இந்தியாவின் சுரங்கங்களின் விவரம் சம்பந்தமான அறிக்கைகளையும் டாடா கவனித்தே வந்தார். 1882 - ஆம் ஆண்டு மத்திய மாகாணத்தில் சாண்டா ஜில்லாவில் புராதன முறைகளில் எடுக்கப்பட்டுவந்த இரும்பு சம்பந்தமான அறிக்கை வெளியானதும் அங்கே பெரிய இரும்புச் சுரங்கம் இருக்கிறதா என்பதைக் கண்டறியவும், அந்த இரும்பு நல்ல தரந்தானா என்பதைப் பரிசீலனை செய்யவும் இவர் எண்ணங்கொண்டார். அங்கிருந்த 'மாதிரி இருப்புப் பாளத்தை' இங்கிலாந்துக்கு அனுப்பிப் பரிசீலனை செய்யலானார்.

சாண்டா ஜில்லாவின் சுரங்கத் தொழிலுக்குத் தற்காலிக அனுமதி தரும்படி, டாடா மத்திய மாகாணச் சர்க்காரைக் கோரியபோது, தனிப்பட்டவர்களின் முயற்சி சீக்கிரம் கைவிடப்படும் என்று கூறிச் சர்க்கார் அனுமதிதர மறுத்துவிட்டது. அதன்பின் இரண்டாண்டுகள் ஒன்றும் செய்யக்கூடவில்லை. இதனால் டாடா சற்றும் மனம் தளரவில்லை. அதன்பின் இங்கிலாந்து சென்றபோது இந்தியா மந்திரியைப் பேட்டி கண்டு, தக்க உதவி செய்யுமாறு கோரினார். பின்பு மத்திய மாகாணச் சர்க்கார் அனுமதித்ததன் மேல் சாண்டா ஜில்லாவின் பல பாகங்களில் பூமியைக் குடைந்து பரிசீலனை செய்தனர்.

ஆனால் முடிவில் அந்த வட்டாரங்கள் தக்க சுரங்கமுள்ளனவல்ல வென்று கைவிடப் பட்டன. ஆனால் டாடாவின் குமாரர் **தோரப் ஜியின்** முயற்சியால் பிற்காலத்தில் ஓரிஸ்ஸாவை யடுத்த **மௌர்பஞ்சு** சமஸ்தானத்தில் **சாக்சி** என்ற இடத்தில் இருப்புச் சுரங்க மிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, தொழிற்சாலையும் அங்கே ஸ்தாபிதம் செய்யப்பட்டது. அதுதான் இப் போது 'ஜாம்ஷெட்பூர்' என வழங்கப்படும் இடமாகும். இம்மாதிரியே பலவிடங்களைச் சர்வே செய்யவும், பூர்வாங்கப் பரிசீலனைகளை நடத்த வும் லக்ஷக்கணக்கில் டாடா தம் சொந்தப் பணத்தைச் செலவிட்டார். சர்க்காரிடமிருந்து இவைகளுக்காக எவ்வித உதவியும் கிடைக்க வில்லை. தேசியப் பொதுத் தொழில்களில்கூட, சர்க்காரின் உதவியின்றித் தனிப்பட்டவர்களின் முயற்சியையே பெரிதும் இந்தியா நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

இந்தியாவின் மேற்குக் கடற்கரைச் சார லில், ஏராளமான பருவமழை ஆண்டுதோறும் பெய்து வீணுவதைக் காணும், யோசனையுள்ள யாரும் அதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய இயலுமா வென்ற சிந்தனை கொள்ளாமலிருக்க முடியாது. அப்படியிருக்கையில் புத்தி கூர்மை யும் இயந்திர சாதனங்களை எவ்வெவ்வகையில் பெருக்கலாம் என்ற அறிவுமுள்ள டாடா

இதைக் கவனியாமலிருப்பாரா? ஆகவே, 1875ல் இருந்தே டாடாவின் மனத்தில் அவ்விதம் கிடைக்கக்கூடிய மின்சார சக்தியைப் பஞ்சாலைக்குப் பயன் படுத்திக்கொள்ள முடியுமா என்ற யோசனை இருந்ததுண்டு. 1897-ஆம் ஆண்டில் **டேவிட் காஸ்ட்லிங்** என்னும் எஞ்சினீயர் அப்படி மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமென்று பரிசீலனை செய்து அறிவித்ததன்மேல் அவரும் டாடாவும் மில்லர் என்பாருடன் ஒரு கூட்டுச் சபை ஏற்படுத்திக்கொண்டனர். பம்பாய்க்கு 43 மைல் தூரத்திலுள்ள **லொனவ்லா** என்னுமிடத்தில் பெய்யும் மழையைத் தேக்கி அதிலிருந்து மின்சாரம் உற்பத்திசெய்து பம்பாய்க்கு வேண்டுமான மின்சார சக்தியை 'சப்ளை' செய்ய முடியுமெனப் பரிசீலனையால் தெரியவந்தது. அதன்பின் டாடா அரசாங்கத்தாரை நாடி அநுமதி முதலானவைகளைப் பெற முயற்சித்துக்கொண்டிருந்தார். இதற்கிடையிலேயே இவருடைய உடல் நலம் குறையத் தொடங்கிவிட்டது. உலகம் ஒருவரை அதிகமாக விரும்பத் தொடங்குகையில் தான் கூற்றுவனும் அவரையே விரும்புகிறுன். மரணத்தை யாரால் தடுக்கமுடியும்!

டாடா தமது மூன்று அபிலாஷைகளுக்கும் அடிகோலினரே யன்றி, அவைகள் பூர்த்தியாகும் வரை அவர் உயிருடனிருந்து பார்க்க வில்லை. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற

மூதுரையைச் செவ்வனே மெய்ப்பித்துக் காட்டித் தம் கடனைச் செய்துவிட்டு அதன் நலனை அனுபவிக்கும் பாக்கியத்தைத் தம் தேசத்தாருக்கு அளித்துவிட்டு இவர் சென்றுவிட்டார். தேசத்தில் தேங்கிக் கிடக்கும் செல்வத்தை எப்படி உண்மையான ஸ்வதேசி முயற்சிகளில் உபயோகப் படுத்தலா மென்பதற்கு உதாரண புருஷராகத் தாம் நிறுவின திட்டங்களால் டாடா விளங்குகிறார். அவருடைய புத்தி நுட்பத்துக்கும், தீர்க்க திருஷ்டிக்கும், தேசபக்தி நிறைந்த கொள்கைக்கும் என்றும் அழியாத சின்னமாக அவர் அடிகோலிய மூன்று திட்டங்களும் இன்றும் நிலைபெற்றுவிட்டன. அவற்றிற்கு முக்கியப் பொறுப்பாளிகள் தந்தைக்குத் தக்க அவர்தம் தனயர்களே என்றுதான் கூற வேண்டும்.

## 17

## டாடாவும் அரசியலும்

போர்க்களத்தில் முன்னேறிச் செல்லுகிறது படை. முன்னணிப் படைகள் மாள மாளப் பின்னணிப் படைகள் முன்வருகின்றன. பின்னணிகளுக்கும் பின்னுல் யுத்த தளவாடங்களும், படைக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பலவகை வண்டிகளில் வந்துகொண்டே யிருக்கின்றன. முன்னணியில் நின்று மாள்பவன்தான் தீரனு? பின்னுல் 'லாரி' ஓட்டுபவன் தீரனல்லவா? முன்னணி வீரன் தன் உயிரை எவ்விதம் கருதி யுத்தரங்கத்திற்கு வந்திருக்கின்ருனே, அவ்வித மேதான் லாரி யோட்டியும் தன் உயிரைத் திரண மாய்க் கருதி வந்திருக்கிருன். இருவரும் தம் உயிரைத் துரும்பாகக் கருதியே போர்க்களம் போந்திருக்கின்றனர். இருவர் மனேபாவத்திலும் ஏதாவது பேதமுண்டா? முன்னவன் விரைவில் மாளக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்;

பின்னவனுக்கு அவை குறைவு. வேற்றுமை அவ்வளவுதானே? அதுபோன்று பத்தொன்பதாம் நூற்றுண்டிலிருந்தோரின் தேசியத் திட்டம், மக்கள் வெள்ளை நிறத்தைக் கண்டால் பதறி அஞ்சுவதை ஒழிப்பதும், அச்சத்தை நீக்கி ஆண்மையைத் தாங்கச் செய்வதும், நாடு காவலுக்கு இந்தியருக்கும் ஞான முண்டென்று சாற்றுவதும், அடிமைத் தொண்டொன்றே தொழிலாகக் கொண்டிருந்தோருக்குப் பல தொழில்களைக் கற்க மார்க்கங்கள் காட்டுவதும்,தாம் தந்தபொருளைக்கொண்டே, ஜனங்களைத் தாங்கும் அரசியலாரை அஞ்சுதரு பேயென் றெண்ணி நெஞ்சம் அயர்வதைப் போக்குவதும், ஜாதிமதச் சண்டைகளை விடுத்துத் தேசியத்தில் ஒற்றுமை காணச் செய்வதுமேயாகும். இவையே பின், இரண்டொரு வருஷங்களில், சுருக்கமாக, '**ஸ்வதேசியம்**' '**ஸ்வராஜ்யம்**' என்னும் தேசீயத்திட்ட உருவைக் கொண்டன. முன்னணியில் **தாதாபாய் நௌரோஜி, பெரோஸ்ஷா மேத்தா** போன்றவர்கள் இருந்தாலும், அவர்களுக்கு ஆதரவாகப் பின்னணியில் நம் டாடா கடைசி வரை இருந்தார். அடிமைத் தொழிலொன்றே தொண்டெனக் கொண்டிருந்தாருக்குச் சிறந்த தொழில்களைக் கற்க மார்க்கங்கள் காட்டுவதையே தமது முக்கிய கடமையாக இவர் மேற்கொண்டிருந்தார். ஆகவே ஸ்வதேசியமென்னும் 'சூரியனி'ன் உதயத்தைத் தெரி

விக்கும் வெள்ளிமீனைப் போன்று தம் ஆலைகளில் ஒன்றிற்கு 'ஸ்வதேசி' என்ற நாமத்தையே சூட்டினார். இத்தகையார், வீரர் கூட்டமான காங்கிரஸை நாடாமலிருக்க முடியுமா? உண்மையில் பார்க்கப்போனால் காங்கிரஸின் முதல் கூட்டத்திலேயே டாடா பிரஸன்னராயிருந்தார். அத்துடன் காங்கிரஸ் ஏற்பட்டதும் அதில் ஐக்யமான, பம்பாய் மாகாண சங்கத்தில் வெகு நாளாகவே இவர் அங்கத்தினராக இருந்துகொண் டிருந்தார். ஆகவே அரசியலின் மேற் கொந்தளிப்பின் அடியிலிருந்து ஆக்கவேலை செய்துகொண்டிருந்த டாடா அரசியலில் பங்கெடுக்கவில்லை யென்று மதிப்பிடுவது தவறானதாகும். அதுமட்டுமல்ல. பின்னணிகளுக்கும் சிற்சில சமயங்களில் நேரும் அபாயத்தை எதிர்த்து நிற்கவேண்டிய அவசியம் ஏற்படுவதைப்போல டாடாவிற்கும் ஏற்பட்டது. அச் சம்பவங்களைக் கவனித்தால், டாடா அரசியல் விஷயங்களில் எவ்வளவு முற்போக்கான கருத்துடையவராக இருந்தாரென்பதும், அவசியமேற்படில் எத்தகைய தியாகத்திற்கும் பின் வாங்காத நெஞ்சத் துணிவுடையவர் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவரும்.

'ஏஷியாடிக் பாங்கிங் கார்பொரேஷ'னில் அலுவல் கொள்ள மேல்நாடு செல்ல வேண்டி

டாடா சீனுவிலிருந்து திருமபிவந்து பம்பாயில் சில மாதங்கள் தங்கி இருந்தார். வேல்ஸ் இள வரசரின் திருமண தினத்தை முன்னிட்டு ஒரு நாள் ஒரு மைதானத்தில் வாணவேடிக்கை ஏற் பாடாகி யிருந்தது. ப்ரேம்சந்தும் டாடாவும் அதைப் பார்க்கத் தங்கள் நாற்காலிகளில் அமர்ந் திருந்தனர். அதற்குள் வெளியிலிருந்த நண்ப ரொருவர் ஏதோ சைகை காட்டவே ராய்ச் சந்த் எழுந்து வெளியே சென்ருர். அப்போது வெள்ளைக்கார மாதர்கள் சில பேர்களுக்கு நாற் காலிகள் போடுவதற்காக வெள்ளை உத்தி யோகஸ்தரொருவர் ராய்ச்சந்தின் நாற்காலியை எடுத்தார். டாடா அந்த நாற்காலி, காலி அன்று என்றும், அதில் உட்கார்ந்திருந்தவர் வெளியே ஒரு சிறிய அலுவலின்மேல் போயிருப்பதாகவும், அதை எடுக்கவேண்டாம் என்றும் கூறினுர். அவ்வளவுதான் ; அவ்வெள்ளையருக்குப் பிரமாத மான கோபம் வந்துவிட்டது. டாடாவை அவ மரியாதையாகப் பேசிவிட்டு, பலாத்காரமாகத் தள்ளிவிட்டு, நாற்காலியைக் கொண்டுபோக முயன்ருர். ஆனுல் அது டாடாவிடம் பலிக்க வில்லை. எனவே, அவ்வெள்ளையர் அவரை அன் றிரவு காவலில் வைக்க முயற்சித்தார்.

இதற்குள் வேருெரு ஆங்கிலேயர் தலையிட்டு டாடா இன்னுரென்பதைக் கூறி அந்த உத்தி யோகஸ்தரை டாடாவிடம் வருத்தம் தெரிவித்

துக் கொள்ளச் செய்தார். ஆனால் டாடா தம் பக்கம் நியாய மிருத்தலால் பரிபூர்ண மன்னிப்பையே விரும்பினார். இன்றேல் தாம் காவலிலேயே இருப்பதையும் லக்ஷியம் செய்யவில்லை. இவ்வளவுக்குள் வேறு சில பிரமுகர்கள் தலையிட்டு அவரை ஜாமீனில் வெளியே வர ஒப்புக் கொள்ளச்செய்து மீட்டுக்கொண்டு வந்ததுடன், அந்த உத்தியோகஸ்தரிட மிருந்தும் தக்கதோர் மன்னிப்பை பெறச் செய்தனர்.

"கப்பலேறுவாயோ, அடிமை, கடலைத் தாண்டுவாயோ?" என இந்தியர்கள் ஏளனமாகக் கேட்கப்பட்டதைப் பொறுமல், 'கப்பலும் ஓட்டுவோம், கடலையுந் தாண்டுவோம்' என்று நடத்திக் காட்டியவர் டாடா என்பதையும் கண்டோம். தவிர, அவர் நடத்திய 'கட்டணப் போர்' சரித்திரப் பிரசித்தி யாகிவிட்டது. இவை போன்ற போராட்டங்களால் நாட்டின் கௌரவத்திலும், நாட்டு நலனைப் பாதுகாப்பதிலும் அவர் எவ்வளவு கருத்துக் கொண்டிருந்தார் என்பது தெரிய வருகிறது. தவிரவும் அவர் பழுத்த தேசிய வாதியாகவே இருந்தார் என்பதற்கும் சான்றுகள் இல்லாமற் போகவில்லை. இந்திய விஞ்ஞானக் கழகத்தில் ஜாதி பேதமின்றித் தக்கோர் யாருக்கும் இடமுண்டு என்பதைச் சில பார்ஸிகள் ஆக்ஷேபித்து பார்ஸிகளுக்கெனச் சில இடங்கள் ஒதுக்கி அளிக்கப்படவேண்டுமென்று

கோரினார்கள். நூற்றுக்கணக்காக நாட்டிலுள்ளோர் அதிற் பயின்று முன்வர ஆசைப்படுகையில் சில பார்ஸி மாணவருக்கு மாத்திரம் அங்கே போதிப்பதற்காக ஏராளமான பொருட்செலவில் அவ்விதமான கழகத்தை ஏற்படுத்துதல் அறிவீனம் என்று இவர் விடையளித்து விட்டார். ஒரு சமயம் நண்பரொருவர் முன் யோசனையின்றி டாடாவிடம் அவர் இந்தியரல்லரென்றும் ஆகவே காங்கிரஸுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் கூறிவிடவே 'நான் இந்தியனில்லையேல், பின் யார் தான் இந்தியன்?' என வெடுக்கெனக் கேள்வி கேட்டார். எப்போதும் பொது விவகாரங்களில் டாடா முதலில் இந்தியர், பின்னர்தான் பார்ஸி.

அரசியலில் டாடா எவ்வித அபிப்பிராயங் கொண்டிருந்தார் என்பதற்கும், இவர் எந்த ரகத்தைச் சேர்ந்தவ ரென்பதற்கும் இனி பல மேற்கோள்கள் அவசியமல்ல. சுருங்கக் கூறின் இந்திய அரசியலின் முற்போக்குச் சக்திகளுடன் தம்மையும் இவர் பிணைத்துக்கொண்டிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. சர்க்காரின் 'மதுக்கொள்கை'யையும் டாடா தம் நண்பர்களிடம் மிகவும் கண்டித்திருக்கிறார். குடியை அறவே ஒழிக்கவேண்டு மென்பதிலும் இவர் யாருக்கும் இளைத்தவரல்லர். அதனாலேயே அக்காலத்தில் நடந்த மிதக் குடிப் பிரசாரத்திற்கும்

தமது உதவியை இவர் அளித்தார். அக்காலத்தில் துரைத்தனத்தைக் கண்டிப்பதில் ஏற்படும் விளைவுகளையும், துரைத்தனத்தார் தாங்கள் தவறே செய்ய முடியாதென்று கொண்டிருந்த மனப்பிராந்தியையும், இந்தியர்கள் அபிலாஷைகளான முற்போக்கு எண்ணங்கள் தீமை பயப்பனவென்று அவைகளை அதிகார வர்க்கம் நசுக்க முற்பட்டதையும் விளக்கித் தம் ஆங்கில நண்பரொருவருக்கு இவர் எழுதிய கடிதங்கள் இவருடைய புத்திரர்களின் காப்பில் இவருக்குப் பின்னும் இருந்தன.

## 18

## சொந்த வாழ்க்கை

இந்திய மண்ணில் இல்லறத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உள்ளது. ஜாதி பேதங்களால் வேற்றுமைப்பட்டிருப்பினும் இல்லற தர்மத்தைப் பொறுத்தவரை இந்தியர் எவரா யிருப்பினும் அதன்பால் ஒரு தெய்விகத்தைக் காணுகின்றனர். மற்ற நாடுகளைப்போல இங்கே அவ்வறத்தை ரூபா அணுவில் அளப்பதில்லை. இங்கே ஒவ்வொரு மனிதனின் ஆத்மிக வாழ்விற்கும் துணை புரியும் ஒரு சாதனமே அது. இக்கருத்துப் பன்னெடுங் காலமாக இம்மண்ணில் வேரூன்றிவிட்டது. ஆகவே குடும்ப வாழ்வில் அமைதி காணுதல் மற்றத் துறைகளில் வெற்றியடைய ஊக்கமளிக்கும் ஒரு துணையாகும். டாடாவின் குடும்ப வாழ்வு பொதுவாக இன்பகரமான தொன்றாகவே இருந்ததென்னலாம்.

டாடாவின் தந்தை நஸர் வாஞ்சி பம்பாய்க்குக் குடியேறியதிலிருந்து, தொழிலுக்கு வசதி

யாக இருக்கவேண்டி, பம்பாயின் பலபல பாகங்களில் குடியிருந்து கொண்டிருந்தார். ஆனால் தந்தையும் மகனும் யோசனை செய்து தங்கள் அந்தஸ்துக்குத் தக்க முறையில் ஒரு மாளிகை கட்டிக்கொள்ள நினைத்து, பம்பாய் எஸ்ப்ளனேடில் நிலம் வாங்கினர். ஆனால் **'எஸ்ப்ளனேட் மாளிகை'** கட்டி முடிவதற்குள் 29-1-1886-இல் நஸர் வாஞ்சி இறந்துவிட்டார். கட்டடம் முடிந்தபின் டாடாவின் குடும்ப வாசஸ்தலம் 'எஸ்ப்ளனேட் மாளிகை'யே'. தமது சுற்றுப் பிரயாணங்களில் அங்கங்கே காணும் அழகான பொருள், சிற்பம், சித்திரம் முதலியவைகளை யெல்லாம் கொண்டு அம்மாளிகையை அழகுறச் செய்வதில் டாடா எப்போதுமே கவனமுடையவராக இருந்தார். இது தவிர பல புஸ்தகங்களைப் படிப்பதிலும் டாடா மிக்க ஆர்வமுடையவர். ஆகவே இவரது இல்லப் புத்தகசாலை பலவிதப் புஸ்தகங்களால் நிறைந்ததொன்றாய் இருந்தது. ஊருக்கு வெளியே சுமார் 50 மைல் தூரத்திலிருந்த மாதரானிலிருந்த பங்களாவில் ஓய்வு நேரத்தைக் கழிப்பதில்தான் இவருக்கு நிரம்பவும் திருப்தி.

டாடாவின் மனைவியார் ஹீராபாய் அமைதியும், தர்ம சிந்தனையும், மதப்பற்று முடையவர். தங்களது உறவினர்பால் மிகப் பரிவும், குடும்ப மேற்பார்வையில் நல்ல விசாரணையும் கொண்டவராக இவர் இருந்தார். டாடாவின் இளைய

மகனுர் ரத்தன்ஜி 1892-இல் நாகாசேத் என்னும் பார்ஸி மாதை மணந்துகொண்டு, அவர் இருந்த வரையில் அவருடைய வாசஸ்தலத்திலேயே இருந்தார். ஆனுல் பெரியமகனுர் தோரப்ஜி அதன் பின் ஆறு ஆண்டுகள் கழித்தே மேஹர் பாய் பாபா என்பாரை மணந்துகொண்டு மலபார் ஹில்லில் வசிக்கலானுர். ஆனுல் தந்தையுடன் உணவுகொள்ள இருமக்களும் தவறியதில்லை. அன்ருடம் எங்கிருந்தாயினும் உறவினர் நண்பர் எவராகிலும் விருந்தினராக வாய்த்துவிடுவர். ஆகவே அந்நேரம் மிக்க ரம்மியமாகவே கழியும். குடும்பத்திலுள்ள மருமக்கள்முதல், யாவருக்கும் டாடாவிடம் பெருமதிப்புடன் சிறிது அச்சமும் உண்டு என்றே கூறலாம். இவரும் யாவரிடத்தும் மிக்க அன்பும் அவ்வப்பொழுது தக்க முறையில் குடும்பத்தாருக்குப் புத்தி சொல்லக்கூடிய தன்மையும் உடையவராக இருந்தார்.

தமதுவீட்டு ஊழியர்களிடமும், இன்சொல்லும் அனுதாபமுமுடையவராகவே இவர் இருந்ததால், அவர்களுக்கும் டாடாவிடம் விசுவாசமும், மரியாதையும் அதிகம். சிற்சில சமயங்களில், பிறர் தங்கள் வேலையைச் சரிவரச் செய்யாதபோது இவர் சிறிது பொறுமையை இழந்து கடிந்து கொள்ளினும், பின்னர் அதற்காக வருந்துவார். இத்தன்மை, மற்றையோருக்கு இவரிடம் இன்னும் அதிக விசுவாசத்தையும் அன்பையும் உண்டாக்கிற்று. மிதமிஞ்சிய செல்வமிருந்தும், டாடா

எளிய முறையில் ஆடம்பரமின்றியே வாழ்ந்தார். தமது சமூகத்தினரிடையே ஏதாவது மதச் சடங்குகள் நடக்கும்போதுதான் பொதுவாக இவர் காணப்படுவார். குடும்ப தானதருமங்களிலும் இவர் கை குறுகியதே கிடையாது. இவரது ஆண்டு நிறைவு விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படும். அன்று இவரது மாளிகையில் எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் ஒரு பொதுச் சுபதினமாகும்.

அக்காலத்தில் பம்பாயில் மாலையில் பொழுது போக்கிற்கான நன்முறைப்பட்ட 'கிளப்புகள்' கிடையா. அனுதினமும் பெருகிவந்த நகரத்தில் அது ஒரு குறையாகவே இருந்தது. தவிரவும் மாலைவேளைகளில் நான்கு நண்பர்களுடன் ஏதாவது பேசவோ சிறிய விளையாட்டுக்கள் விளையாடவோ தக்க வசதி இல்லை. 'எம்ப்ரஸ்மில்'லை ஆரம்பிப்பதற்கு முன்னமேயே டாடா இக்குறையை மிகவும் உணர்ந்தார். அப்பொழுது வக்கீல் தொழிலில் பிரபல மடைந்திருந்த பெரோஸ்ஷா மேத்தாவும் அக்குறையை நீக்க ஏதாவது செய்யவேண்டுமென விரும்பினார். ஆகவே, **'எல்பின்ஸ்டன் கிளப்'** ஆரம்பிக்கப் பட்டது. 'எக்ஸெல்ஸியர்' என்ற கிளப்பிலும் சிலகாலம் அந்நண்பர்கள் இருந்தனர். ஆனால் விரைவில் 'எல்பின்ஸ்ட்'டனுடன் அதை இணைத்துவிட்டனர். வார விருந்துகளும் ஞாயிறுப் பிரசங்கங்களும் அக்கிளப்புகளில் ஏற்பாடு

செய்யப்பட்டன. இவை தவிர, நகர அபிவிருத்திக்கு அனுசரணையான கட்டடங்கள் கட்டுவதிலும் டாடா பின்னடையவில்லை. பம்பாயில் பலவிடங்களில் நிலம் வாங்கித் தக்க சுகாதார முறையில் வீடுகளைக் கட்டிச் சரசமான குடிக்கூலிக்கு விடும் ஏற்பாடுகள் யாவற்றையும் இவர் செய்தார். 'ஆல்பர்ட் கட்டடங்கள்', வெள்ளையரும் பணக்காரர்களும் குடியிருக்கத்தக்க 'ஜிம்கானு சேம்பர்ஸ்,' 'விக்டோரியா கட்டடங்கள்,' 'ஆல்பியன் பிளேஸ்,' 'அலெக்ஸாண்ட்ரா டெர்ரேஸ்' பைக்குல்லாவிலிருக்கும் 'ஜூபிலி கட்டடங்கள்,' 'ரீஹௌஸ்,' 'சான்தர்ஸ்ட் ஹௌஸ்,' 'ரூஸ்வெல்ட் ஹௌஸ்,' 'சார்ஜண்ட் ஹௌஸ்,' 'ஜென்கின்ஸ் ஹௌஸ்,' 'ஸ்டேஷன் டெர்ரேஸ்,' 'காண்டி ஹவுஸ்,' இன்னும் பல பங்களாக்கள் யாவும் டாடாவினுடையனவே. இப்பொழுது இவைகள் யாவும் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்திற்காக எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் வரும் வருமானம் அக்கழகத்திற்கே சேர்ந்துவருகிறது. இவைகளையெல்லாம் தவிர டாடாவை ஞாபகமூட்டக்கூடிய வகையில் பம்பாயில் இலங்குவது கடற்கரைக்கெதிரில் துறைமுகத்திற் கருகிலுள்ள '**டாஜ் மஹால் ஹோட்டலே**' யாகும். இந்தியாவிற்கு வரும் அந்நிய நாட்டினர் டாஜ் மஹாலைப் பார்ப்பதில் எவ்வளவு ஊக்கங் கொண்டிருக்கின்றனரோ, அவ்வளவுக்கு, அவர்கள் தங்க இந்தியாவி

லேயே வசதிகளுடையதும், சிறந்ததுமான 'தாஜ் மஹால் ஹோட்டலில்' தங்குவதற்கும் விருப்பம் கொண்டிருக்கின்றனர் என்றே கூற லாம். டாஜ் மஹால் ஹோட்டலை வருவாயை உத்தேசித்து டாடா கட்டவில்லை. 'ஐரோப்பிய நாடுகளில் தங்க எவ்வளவு வசதிகள் செய்துதரப் படுகின்றன.அதனால் அந்நாட்டைப்பற்றிய அபிப் பிராயங்கள் எவ்வாறு உயர்கின்றன, அவ்வாறு இந்தியாவிலும் ஏன் ஒரு ஹோட்டலாவது இருக் கக்கூடாது?' என்ற ஒரே எண்ணமே அதை இவர் கட்டக் காரணமாயிற்று அத்தகைய முயற் சியில் டாடாவைத் தவிர்த்து யார் ஈடுபடுவர்? ஆகவே அதை யுணர்ந்து டாடா அப்பொறுப்பை மேற்கொண்டமை இவருக்கு ஆசியாவிற் சிறந்த ஹோட்டலை ஏற்படுத்திய புகழை அளித்துவிட் டது. 1903-ஆம் ஆண்டில் இவர் அதைத் தொடங்கினர்.

பம்பாயை அழகுள்ள நகராக்கின பலருள் டாடாவும் ஒருவர் என்பதையும் கண்டோம். இத்தகைய அலுவலில் அவருக்கு இடையூறுகள் ஏற்படாமல் போய்விடவில்லை. சால்செட் பிராந் தியத்திலும் மற்ற சில வட்டாரங்களிலும், காலி நிலங்களில் வீடு கட்டி அனுபவித்ததற்காகச் சர்க்கார் அப்படிக் கட்டிக்கொண்டோருக்கு அதிக அபராதத்தை விதித்து வந்தனர். தவிரவும் நில தர்க்காஸ்துச் சட்டத்தையும் நகர அபிவிருத்திக்கு இடையூறுகும் வகையில் செய்

தனர். இதை எதிர்த்து டாடா வைஸ்ராய் வரையில் சென்று போராடினுர். டாடாவின் வாதத்தை அவர்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தக்கபடி சட்டங்களில் மாற்றஞ் செய்தனர்.

பம்பாயிலேயே வசித்த டாடா தமது பழைய கிராமமான நவ்சாரியையும் அங்கிருந்த தமது தந்தை கட்டிய மாளிகையையும் புறக்கணித்து விடவில்லே. அதையும் நல்ல முறையில் கவனித்து வந்ததுடன், இவரது பொழுது போக்கான தோட்டப் பயிரிடல், புஷ்பச்செடி வளர்த்தல் முதலிய பணிகளேயும் அம்மாளிகையைச் சுற்றிய நிலத்தில் செய்துவந்தார். இவர் சுற்றுப் பிரயாணங்களிலிருந்து திரும்பியவுடன், நவ்சாரி தோட்டத்தில் பல நாட்டுப் பயிர்களேயும் நட்டுப் பரிசோதனேகள் செய்யாமலிருந்ததில்லே. இப்படியாக அதை உய்யான வனமாக்கியதுடன் நில்லாமல் சிற்சில மிருகங்களேயும் அங்கே வளர்த்து அதைக் கண்காட்சிசாலேயும் ஆக்கினுர்.

பட்டுத் தொழிலே இந்தியாவில் தக்க முறையில் அமைப்பதையும் டாடா தமது ஓய்வு நேரத்தில் கவனித்து வந்தார். ஒரு சமயம் கள்ளிக்கோட்டை முதலான மேற் கடற்கரைப் பட்டினங்கள் வழியே, பிரயாணம் செய்துவிட்டு, பெங்களூர் வந்து, அங்கே அப்போது திவானுக இருந்த சர். சேஷாத்திரி ஐயரின் உதவியால், மித உஷ்ண நிலேயை உத்தேசித்துப் பெங்களூரில் இடம்பெற்றுப் பட்டுத் தொழிற்சாலே யொன்றை

டாடா ஏற்பாடு செய்தார். பட்டுத்தொழில் ஜப்பானில் நல்ல முறையில் செய்யப்படுவதை அவர் அறிந்திருந்ததுடன் அதை நடத்தக்கூடிய தகுதி வாய்ந்திருந்த தம்பதிகள் இருவரையும் அறிந்திருந்தார். ஆகவே அவர்களின் மேற்பார்வையில் இந்தியருக்கு அத்தொழிலில் பயிற்சி யளிக்க, வேண்டுவனவற்றை இவர் செய்தார். தொழில் வெற்றியளிக்கவே, பிற்காலத்தில் ஏழை எளிய வர்க்காக உழைத்துவரும் இரட்சண்ய சேனேயாரிடம் அதை ஒப்படைத்தனர். இந்தியாவில் பட்டுத்தொழில் நேரிய முறையில் ஏற்பட டாடாவின் இச்சாலேதான் வழிகாட்டியாக இருந்த தென்பதில் சந்தேகமில்லே.

மேற்குறிப்பிட்டவைகளேத் தவிர விரைவில் கெடக்கூடிய பழம் முதலான பொருள்களேக் குளிர்ச்சியாக வைத்திருந்து பல நாட்கள் கெடாமலிருக்கச் செய்யமுடியுமா வென்னும் பரீட்சையையும் இவர் செய்துவந்தார். அதில் வெற்றிபெற்ருல், இந்திய மாம்பழங்கள் உலகில் எங்கணும் புகழப்படும் என்பது இவர் துணிபு. இவ்விதமான பலன்தரும் சோதனேகளில் தமது ஓய்வைக் கழித்துக்கொண்டும், தொழில் நேரத்தில் செவ்வனே அதில் ஈடுபட்டும் குடும்பத்திலும் அமைதிபெற்றும் இவர் இருந்தாரென்ருலும், இவரது சுமார் 40 வருஷத்திய சலியாத உழைப்பும், தமது தேக சுகங்களேயும் பொருட் படுத்தாது இந்தியக் கைத்தொழில் முன்னேற்

றத்திற்கான துறைகளைக் காணுவதில் பட்ட கஷ்டங்களும் இவரது தேக ஸ்திதியைப் பாதிக்காமலிருக்கவில்லை. ஆகவே இவருக்கு இருதயத்தில் கொஞ்ச நாட்களாக வலி இருந்துவரத் தொடங்கியது. 1904-இன் ஆரம்பத்தில் அது அதிகப்படவே தக்க வைத்திய சிகிச்சையை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

# 19

## இறுதி நாட்கள்

**இந்தியக் கைத்தொழில் அரசர் தம் இறுதி நாளை** நோக்கி விரைந்துகொண்டிருந்தார். தம்முடைய வாழ்க்கையில் அவருக்குத் திருப்தியேயிருந்தது. வயது முதிர முதிர ஏராளமான செல்வத்தை இவர் அடைந்தார். எத்தகைய ஆடம்பர வாழ்வையும் இவர் மேற்கொண்டிருக்கலாம்; ஆனால் இவர் எளிய வாழ்வையே மேற்கொண்டிருந்தார். அதோடு செல்வச் செழிப்பு இவரது இதயத்தைச் சுருக்கி விடவில்லை. இவரது கொடைக் கை என்றும் குறுகிவிடவில்லை. சமூகத்தின் வறுமையை அகற்றுவது எவ்வளவு அவசியம்? இச் சமூகத்திலுள்ள சிறந்த அறிவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்கள் அறிவு பூர்ண விளக்கமுறத் தக்க சந்தர்ப்பங்களை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து, அதனால் கிடைக்கும் நலன்களைச் சமூகத்தின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது அதை

விட எவ்வளவு அவசியம் என்பன இவருடைய நெடுநாளைய கவலைகள். அதற்காகவும் இவர் நிரந்தரக் கொடை ஏற்பாடுகள் செய்தார். இவைகளுக்காக இப்பாரதநாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இப்பெரியாருக்கு நன்றி செலுத்துவார்களென்பதில் சந்தேகமில்லை. தேசத்திற்குப் பெரும் பயன் பயக்கும் இவரது திட்டங்களுக்கு இவர் விதை ஊன்றிவிட்டாரே யன்றி, அவை முளைத்துப் பயனளிப்பதைக் காணும் வரையில் இவரைக் காலன் விட்டு வைக்கவில்லை.

டாடாவின் தேக அசௌக்யம் அதிகரிக்க ஆரம்பிக்கவே, 1904-இல் தக்க சிகிச்சைக்காக ஐரோப்பா செல்வதென்று ஏற்பாடாயிற்று. இவருடன் ஆர். டி. டாடாவும் சென்றார். கெய்ரோவில் ஏற்கனவே டாடாவின் முதல் மகனார் தோரப்ஜி தம்முடைய மனைவியாருடன் இருந்து வந்தனர். அவர்களுடன் டாடா ஒரு மாதம் தங்கினார். அங்கே சிகிச்சை பெற்றுக்கொண்டபின் இவர் வியன்னாவிலிருந்த ஒரு வைத்தியரிடம் போக விரும்பவே அலெக்ஸாண்டிரியா வழியாக டாடா குடும்பம் நேபிள்ஸை அடைந்தது. இந்தியாவை விட்டுப் புறப்படுகையிலேயே இவர் மனைவியாருக்கு அவ்வளவாக உடல் நலம் இல்லை. இவர் சென்ற பின்னும் நோய் குறையவில்லை. ஆகவே அந்த மார்ச் மாதத்திலேயே **ஹீராபாய்** மரணமடைந்தார்.

டாடா நேபிள்ஸில் இருக்கையில் இச்செய்தியும் எட்டிற்று. மனைவியின் மரணச் செய்தியை மனமுடையாதவாறு ஏற்றதாக வெளிக்குத் தோன்றினும் உள்ளத்தில் அது பெருந் துயரையே உண்டாக்கிற்று. ஆகவே அவருடைய நோயும் நாளுக்கு நாள் அதிகரித்ததேயன்றிக் குறையவில்லை. வியன்னு வைத்தியர் சான்றிமோவிற்கு வந்திருந்ததால் அவரிடம் டாடாவைக் கூட்டிச் சென்றனர். பின்னர் சில விசேஷ சிகிச்சைக்காக ஜெர்மனியிலுள்ள **பாட்நாஹிமு**க்குப் போக வேண்டுமென்று முடிவாயிற்று. பாட்நாஹிமில் சின்னுட்கள் சிகிச்சை பெற்றும் பயன் இன்றி 19-5-1904-இல், அருகில் தோரப்ஜி தம்பதிகளும் ஆர். டி. டாடாவும் இன்னுமொரு உறவினரும் சில நண்பர்களுமிருக்க, இந்தியக் கைத்தொழில் அரசர் ஜாம்ஷெட்ஜி டாடாவின் ஆவி பிரிந்தது.

அப்பொழுது இவருக்கு வயது அறுபத்தைந் தாகும். சில தினங்களுக்குள் டாடாவின் உடலை இங்கிலாந்திற்கு எடுத்துப் போயினர். அங்கே **ப்ரூக்உட்டி**லுள்ள இடுகாட்டில் **ஸொராஸ்டிரிய** மதச் சடங்குகளுடன் அதைப் புதைத்தனர். பின்னர் அவ்விடத்தில் ஞாபகார்த்தக் கட்டடம் ஒன்றையும் எழுப்பினர்.

டாடாவின் மரணச் செய்தி விரைவில் பம்பாய்க்கு எட்டியது. பம்பாயின் பல பிரமுகர்

களும் ' **எஸ்ப்ளனேட் ஹவுஸில்** ' துக்கம் விசாரித்தனர். நவ்ஸாரித் தலைமை குருவும் இறந்த ஆன்மாவின் ஞாபகார்த்தமாக ஒரு தொழுகையைப் பல பார்ஸி சமூகத்தினர் கூடியிருக்கும் ஒரு கூட்டத்தில் நடத்திவைத்தார்.

அமெரிக்கா, ஆஸ்ட்ரியா, இங்கிலாந்து, **ஜப்பான்** முதலிய பல தேசங்களினின்றும் அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தன. சில நாட்களுக்குப் பின்னர் பம்பாயில் கவர்னராக இருந்த **லார்ட் லாமிங்டன்** பிரபுவின் தலைமையில் டாடாவின் மரணத்திற்கு அனுதாபங் காட்டவும், தக்கதொரு ஞாபகார்த்த மேற்படுத்தவும் பம்பாய் வாசிகளடங்கிய ஒரு பொதுக்கூட்டம் கூட்டினர். ஜாதி மத பேதமின்றி அப்பொதுக் காரியத்திற்கு யாவரும் சேர்ந்திருந்தனர். தக்கதொரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவதெனத் தீர்மானம் நிறைவேறியது. அதற்கிணங்கச் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் பொது ஜனங்கள் டாடாவின் ஞாபகார்த்த நிதிக்கு உதவினா. 1912-ஆம் ஆண்டு ஏப்ரல்மீ 11வ அப்பொழுது கவர்னராக இருந்த **லார்ட் ஸைடன்ஹாம்** டாடாவின் உருவச்சிலையைத் திறந்துவைத்தார். பம்பாயில் **வாட்பி ரோடும், க்ரூக்ஷேங்க் ரோடும்** சந்திக்குமிடத்தில் அக்கைத்தொழிற் கதிபரின் உருவச்சிலை இன்றும் இலங்குகின்றது.

# 20

## பின் நிகழ்ச்சிகள்

இந்தியாவின் புதிய சகாப்தத்தில் தோன்றி இந்தியக் கைத்தொழில் அறிவின் அபிவிருத் திக்கே தம் வாழ்நாளை அர்ப்பணம் செய்து, தம் லக்ஷியம் நிறைவேறியவுடன் மறைந்தார் டாடா. மரம் நடுபவனின் லக்ஷியம் நடுதல்தான். அதன் பலனை அவன் சிந்திப்பதில்லை. அது போலவே இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தி யின் விதையை டாடா நட்டுச் சென்றார். ஆனால் அதைப் பயிர் செய்து பலனுண்டாக்கத்தக்க ஏற்பாடுகள் செய்துவிட்டேதான் சென்றார் என் பதும் மெச்சத்தக்கதாகும். அத்துடன் இவ ருடைய இரு குமாரர்களும் 'மகன் தந்தைக் காற் றும் நன்றி, இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னும் சொல்' என்பதற் கிணங்க தந்தை போட்டுச் சென்ற, பெங்களூர் விஞ்ஞானக்கழகம், இரும்பு, உருக்குத் தொழிற்சாலை, பம்பாய் மின்சார வசதி ஆகிய மூன்று பெருந் திட்டங்களையும்

நிறைவேற்றிவைக்க அல்லும் பகலும் பாடுபட்டனர். ஆகவே அவைகள் வெகுவிரைவில் பூர்த்தியாகி டாடா சந்ததிக்கே இந்தியாவின் நன்றியை உரிமையாக்கின.

எங்கும் மின்சார விளக்குகளாலும், அலங்காரமான வீடுகளாலும், சுத்தமான பாதைகளாலும் இவை யாவற்றிற்கும் மேலாக மகிழ்ச்சி பொங்கும் மாந்தர் முகங்களாலும் பொலிவுறும், '**ஜாம்ஷட்பூர்**' என்று இன்று வழங்கும் பழைய சாக்சி, என்ற அவ்வட்டாரத்தில் இரும்புச் சுரங்கமிருப்பதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தோரப்ஜி பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல. தம் தந்தை கொண்ட எண்ணம் பூர்த்தியாக வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு உழைத்து, டாடா இரும்பு, உருக்குத் தொழிற்சாலையில், 1911-ஆம் ஆண்டில் வேலை தொடங்கச் செய்தார். அதிலிருந்து இந்தியாவிற்கு வரும் பிறநாட்டாருக்கும் பிரபல உத்தியோகஸ்தருக்கும், கைத்தொழிலில் கருத்துக்கொண்டவர்களுக்கும் 'ஜாம்ஷெட்பூர்' ஒரு யாத்திரை ஸ்தலமாகிவிட்டது.

விஞ்ஞானக் கழகத்தின் சம்பந்தமாகவும், டாடாவின் குமாரர்கள் முயற்சிகொண்டு, இந்திய அரசியலாரின் உதவியால் **லார்ட் மின்டோ** ராஜப்பிரதிநிதியாக இருக்கையில் அதைப் பூர்த்தி பெறச் செய்தனர். **லொனவ்லா** என்றவிடத்தில் **தண்ணீர்** தேக்கி, அதிலிருந்து மின்சாரம்

உற்பத்தி செய்து பம்பாய்க்குக் கொண்டுவரத் தக்க ஏற்பாடுகளும் முடிவுபெற்றுப் பம்பாய் மின்சாரத் திட்டமும் நிறைவேறிற்று. **11-2-1915**-ல் முதல் முதலாக அந்த மின்சார சக்தியை விநியோகிக்கும் பாக்கியம் அப்போது கவர்னராக இருந்த **லார்ட் வில்லிங்டனுக்குக்** கிடைத்தது.

மேற்கூறிய மூவகைத் திட்டங்களாலும் ஏற்படும் நற்பலன்களை இந்தியா ஒவ்வொரு நாளும் முந்திய நாளைவிட அதிகமாகவே அனுபவித்து வருகிறதென்பது சொல்லாமலே விளங்கும். அத்துடன் இன்னும் சுமார் 22 வகைக் கைத்தொழில்களையும் டாடாவின் குமாரர்கள் ஆரம்பித்துவைக்க அவை இன்றும் நடப்பதைக் காண்கிறோம். இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தி யொன்றையே தங்கள் லக்ஷியமாக மேற்கொண்டு உழைத்த டாடா குடும்பத்திற்கு இந்தியா என்றும் கடமைப்பட் டிருக்கிறது. அதன் சரித்திரத்தில் டாடா குடும்பம் புகழ் பெற்றுவிட்டது என்னும் பெருமையில் நாம் மகிழ்ச்சியுறுவோமாக.

**முற்றும்.**

சென்னை அரசாங்க மாஜி முதல் மந்திரி

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரவர்கள்

இயற்றிய

# உபநிஷதப் பலகணி

1. முன்னுரை
2. நசிகேதன்
3. தேவர்கள் தோற்றது
4. படித்தால் போதாது
5. மைத்திரேயி
6. இல்வாழ்கை - ஓர் பயிற்சி
7. பரம்பொருளின் இலக்கணம்
8. சிறு விதைக்குள் மரம் முழுவதும்
9. ஜலத்தில் கரைந்திருக்கும் உப்புப்போல்
10. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டவாறு
11. குருகுல வாசம் முடிந்ததும்
12. சில தருமநூல் தோற்றுவாய்கள்
13. மரக்கட்டைக்குள் மறைந்துள்ள நெருப்பு
14. சாப்பாட்டில் குற்றம் சொல்லவேண்டாம்
15. உலர்ந்த கட்டையும் தளிர்த்துவிடும்
16. தண்ணீர்க் குடத்தில் கண்ட 'ஆத்மா'
17. வில் வளைத்த ஞானம்
18. எங்கும் மறைந்துள்ள பொருள்
19. க்ஷேத்திர நூலுக்கு அடங்காது
20. கீதையும் உபநிஷதமும்
21. நதிகளனைத்தும் கடலில் சேர்ந்துவிடும்
22. அறிவுக்கு எட்டாத பொருள்
23. முடிவுரை.

—— விலை அணா 8 ——

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.



# கண்ணன் காட்டிய வழி

அல்லது

## பகவத் கீதையின் பொருள் விளக்கம்

சென்னை அரசாங்க மாஜி முதல் மந்திரி

**சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்**

இயற்றியது

விலை அணா 8

**முக்கியமான சுலோகங்களும் உரையும் அடங்கியுள்ளது**

பொருளடக்கம்

முன்னுரை : (1) பாரத கதையும் கீதையும் ; (2) கீதையின் சிறப்பு ; (3) சிற்றறிவின் மயக்கம் ; (4) பரம்பொருளாராய்ச்சி ; (5) ஆராயும் முறை ; (6) ஏன் கவனிக்கவேண்டும்? (7) சாஸ்திரம் படிக்கும் முறை ; (8) ஆத்மா ; (9) கர்மவிதி ; (10) கர்ம பலன் ; (11) கர்மவிதிக்கு ஆட்சேபங்கள் ; (12) பிரகிருதி, ஜீவன், பரமாத்மா ; (13) கர்மயோகம் ; (14) கர்மயோகமே வேள்வியும் ; (15) கர்மயோகமே துறவும் ; (16) அமைதியற்ற துறவு ; (17) கர்மயோகமும் வாழ்க்கை நலமும் ; (18) மனதைக் காத்தல் ; (19) தியானம் ; (20) இயற்கைக் குணங்கள் ; (21) அனைவருக்கும் விடுதலை ; (22) நாஸ்திகம் கூடாது ; (23) குண விபாகம் ; (24) பிரபத்தி ; (25) அனைத்தும் ஒன்று ; (26) அத்துவைதமும் கர்மயோகமும் ; (27) விசுவரூப தரிசனம் ; (28) முடிவுரை.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

# கதைக் கோவை

**... ஓர் ஒப்புயர்வற்ற பிரசுரம் ...**

**40 - சிறந்த தமிழ்ச் சிறு கதைகள்**

**40 - பிரபல எழுத்தாளர் எழுதியவை**

| | | |
|---|---|---|
| :: **504** :: பக்கங்கள் | கிளேஸ் பதிப்பு | ரூ. **3—0—0** |
| | பேதர் வெயிட் | ரூ. **3—8—0** |

*இந்நூலைப்பற்றிய அமுத மொழிகள்*

Sunday Times.—* The Alliance Company, that enterprising Publishers of Madras, deserve the thanks of all lovers of Tamil for their latest service to the language. Till now, they have been bringing out mostly brilliant translations of works of famed authors like Bankim Chandra Chatterjee, Dr. Sarat Chandra Chatterjee, R. C. Dutt, Subhas Bose, Prem Chand and others. A few collection of Short Stories also stand to their credit. But now in Kathai Kovai, they have surpassed themselves. * It is verily a magnum opus and must find a place in every Tamil Home. Every Story in the volume is a complete success.

**ஹிந்துஸ்தான் :**—* சிறப்பான பிரசுரம். இக்கோவையில் நவ ரஸங்களும் ரூபம் பெற்றிருக்கின்றன. 40 - ஆசிரியர்கள், 40-வித மனோபாவங்களைச் சித்தரிக்கின்றதால் இந்தத் தொகுப்பைப் படிப்பதில் சலிப்பு ஏற்படாது, ஏற்படவுமில்லை. கலா ரஸிகர்கள், கதையிலும் கருத்திலும் விருப்பமுள்ளவர்கள் இந்தக் கோவையைக் கட்டாயம் வாங்கிப் படிக்கவேண்டும். புத்தகத்தின் அச்சும், அமைப்பும், தோற்றமும் அல்லயன்ஸ் பிரசுரங்களுக்குச் சிகரம்போல் விளங்குகின்றன.

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

## "கதைக் கோவை" — இதைப்பற்றிய புகழுரை

பிரசண்ட விகடன் :—* கதைக் கோவையைப் போ புத்தகமும் கருத்தையள்ளும் வகையில் வெகு அழகாகப் பதி பட்டிருக்கிறது. * இப்புத்தகம் தமிழ் மக்கள் ஒவ்வொ இல்லத்திலும் இருக்கவேண்டியது அவசியம்.

சக்தி :—தமிழிலக்கிய நவமலர்ச்சியின் கொழுந்து இந்நூல். இந்த நூல் ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டும். இது உபசாரமல்ல, உண்மை.

பாலர் கல்வி :— நவரசங்களையும் தனித்தனியாகவும் ஒன்று சேர்த்தும் காணக்கூடிய பல கதைகள் உள்ளன. * இக்காலத்தில் நல்ல தமிழ் நூல்களை அச்சிட்டு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியார் இவ்வளவு அழகான புத்தகத்தை வெளியிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்க தாகும்.

*The Free Press* :—A Notable Book. No Library of Modern Tamil Literature will be complete, it can be safely affirmed, *without this excellent volume.*

பாரத தேவி :— 40 - பேர்கள் எழுதிய சிறந்த சிறுகதைகளை யெல்லாம் திரட்டித் தமிழருக்கு இப்புத்தகத்தின் மூலம் தந்திருக் கும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் ஊழியம் முதலில் பாராட்ட வேண்டியதாகிறது. * இக்கதைக் கோவையை ஒவ்வோர் தமிழரும் கட்டாயம் படிக்கவேண்டியது. இப்புத்தகத்தைப் படிக்கத் தவறிய வர்கள் தமிழ் இலக்கியத்தில் வளர்ச்சிபெற்று வரும் புதிய வித்தை யைப் பார்த்து இன்புறத் தவறிவிட்டவர்களே யாவார்கள்.

*The Indian Express*:—All the Stories are good most of them exquisite and some profound. * The book is neatly printed and remarkably well got up.

Sri *T. K. Chidambaranatha Mudaliar, B. A., B. L., Retired Endowment Commissioner* :—*It is really a pleasure to see a book like your கதைக் கோவை. By means of the publication, you have in a way gauged the literary talents of the Tamil Nad. I heartily congratulate you on the publication.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# விஜயா

டாக்டர் சரத் சந்த்ர சட்டர்ஜி எழுதிய நாவல்களுள் முதன்மையானது. 'இந்திரா' 'ரஜனி' என்னும் பங்கிம் சந்த்ரர் நாவல்களை மொழிபெயர்த்த ஸ்ரீ சு. குருஸ்வாமி பி. ஏ., தமிழில் மொழிபெயர்த்தது.

—— ரூ. 1—8—0 ——

## புகழுரைகளிற் சில

ஜோதி :— * வாசிப்பதற்குச் சுவையாயிருக்கிறது. ஸ்ரீ குருஸ்வாமி, இதைச் சுவை குன்றாமல் மொழிபெயர்த்திருக்கிறார்.

கலைமகள் :—* இந்நவீனம் படிப்பதற்கு மிக்க ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் வைப்பதற்கேற்ற நூல்.

**The Mail:**— The style of the translation is good and expressive and the story is free flowing.

ஜயபாரதி :— * மொழிபெயர்ப்பு நடை சிறப்பா யிருப்பதைக் குறிப்பிடவேண்டும். சரளமான பாஷையில், சொந்தத் தமிழ்க் கதைபோல், 'அந்நிய' சொற்றொடர் இல்லாமல் மொழிபெயர்த்திருப்பது, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு தொண்டெனக் கூற வேண்டும். புஸ்தகம் அச்சுப்பிழையில்லாமல் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. நல்ல பைண்ட் கட்டடத்திலிருக்கும் இப்புத்தகம் பிரசுராலயத்திற்குப் பெருமை யளிப்பதாகும்.

குமரன் :— * ஆடவரும் பெண்டிரும் படித்து இன்புறலாம். இதுமாதிரி வங்காள மொழியிலுள்ள பல இனிய கதைகளையும், நாவல்களையும் மொழிபெயர்த்துத் தமிழுலகுக்குத் தந்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

பாரதமணி :— * ஸ்ரீ குருஸ்வாமியின் மொழிபெயர்ப்பு வாசிப்பதற்கு எளிதாகவும் நல்ல ஓட்டம் கொண்டதாகவும் இருக்கிறது. நல்ல பைண்டில், இவ்வளவு அழகாக, ரூ. 1—8—0 விலைக்கு 300 - பக்கங்கள் கொடுத்திருப்பது அல்லயன்ஸ் கம்பெனியாரின் சிறப்பாகும்.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

# தேவி சௌதுரா

பங்கிம் சந்த்ரர் உயர்தரமான நாவல்களுள் ஒ
வங்காளியிலிருந்து மொழிபெயர்த்தவர் ஸ்ரீ கு. ப. ரா
கோபாலன், பி. ஏ. யாவராலும் மிகவும் புகழப்படும் நூல்.

—— ரூ. **1—8—0** ——

**The Mail** :—The Alliance Company have rendered valuable service to the cause of Modern Tamil Literature by their Publications which include collections of Original Tamil Short Stories and a series of Translations of Hindi & Bengali Novels. Bankim's Novels are of absorbing interest, possessing the take-it-and finish' quality. They are based on facts of history, and the best ideals are inculcated by them.

**தினமணி** :— * *எல்லோருடைய மனத்தையும் கவரும் வண்ணம் வரையப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பவர் ஒவ்வொருவரும் இதை மொழிபெயர்ப்பு என்று எண்ணமுடியாது. புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியதுமுதல் முடியும் வரையில், கீழே வைக்க முடியாதபடி* **அவ்வளவு அழகாக, உணர்ச்சி ததும்ப, செவ்விய நடையில்** *இதை ஸ்ரீ ராஜகோபாலன் எழுதியிருக்கிறார். தமிழர்கள் இதை விரும்பி வரவேற்பார்களென்பதில் சிறிதேனும் ஐயமில்லை.* **புத்தகத்தை ஆடவர், பெண் மக்கள், மாணவ மாணவிகள் அனைவரும் அவசியம் படிக்கவேண்டும்.**

**தனவணிகன்** :— * *இது சரித்திர சம்பந்தமான நாவலாய் இருப்பினும், அநேக அரிய கருத்துக்களைத் தன்னிடையே கொண்டிருக்கிறது. * கதை ருசியாயிருக்கிறது. தத்துவம் நிரம்பிய கதைகளில் இது ஒன்று. மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கிறது.*

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

# ந்தனக் காவடி

**ஜ. ர.** எழுதியவை :: 12 கதைகள் :: அணா 14

## :: இந்நூலைப்பற்றிய சிறப்புரைகள் ::

**குமரன் :—** * நம் நாட்டு வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இக்கதைகள், இனிய தெளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

**ஊழியன் :—** தமிழர்கள் படிக்கவேண்டிய கதைகள்.

**பாரதமணி :—** நம் நாட்டு வாழ்க்கையின் அழகான அம்சங்களை ஆராய்ந்து இனிய நடையில் சித்திரங்கள் சிருஷ்டி செய்யும் சக்தி பெற்றவர் தி. ஜ. ர. என்பதற்கு இப்புத்தகத்தில் பரிபூரண அத்தாட்சி இருக்கிறது.

**தாருல் இஸ்லாம் :—** உயிருள்ள இக்கதைகள் மூலம், ஆசிரியர் மனித வாழ்வையே சித்திரத்துள்ளதுடன், வாழ்வின் உயர்வைக் கதைகளின் மூலம் சமூகத்தினருக்குப் புலப்படுத்துகிறார்.

**சித்ரவாணி :—** காடு முரடற்ற இலகுவான நடை; தெளிவு நிறைந்த விகாசம்; சிந்தனையைத் தூண்டும் கருத்துகள். இவை தாம் அவர் கதைகளுக்குள்ள விசேஷ யோக்யதைகள்.

**கலைமகள் :—** ஒவ்வொன்றும் நெஞ்சை அள்ளும்படியாக அமைகின்றது. சுவை ததும்பும் அபூர்வ இலக்கிய சிருஷ்டிகள்.

**சுதேச மித்திரன் :—** கதைகள் யாவும் சுவாரஸ்யமாய்ப் பின்னப்பட்டிருக்கின்றன.

**மணிக்கொடி :—** தி. ஜ. ர. வின் கதைகள் ஒவ்வொன்றும் ஓர் அழகிய உண்மை.

**ஹிந்துஸ்தான் :—** * * சிறப்பான தமிழ்க் கதைகள்.

**ஹனுமான் :—** இக் கதைகள் தமிழில் சிரஞ்சீவித் தன்மை பெறக்கூடியவை.

**தினமணி :—** கதைகள் வாசித்து அனுபவிக்கவேண்டியவை.

**சினிமா உலகம் :—** ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு தனிச் சுவையை அள்ளித் தருகின்றது.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

## [illegible] வெளியீடுக[illegible]

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | [illegible]க்கு[illegible] [illegible]ல் அரிசியும் | 0 | 8 | 0 |
| 2. | கவி ரவீந்திரநாத் தாகூர் | 1 | 0 | 0 |
| 3. | உல்லாஸ வேளை—(எஸ். வி. வி.) | 2 | 8 | 0 |
| 4. | மால்கோஷ் – வங்காளச் சிறு கதைகள் .... | 2 | 4 | 0 |
| 5. | தோட்டியை மணந்த அரசகுமாரி | 1 | 6 | 0 |
| 6. | பவழ மாலை | 1 | 6 | 0 |
| 7. | திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் சஷ்டி கவசம் | 0 | 2 | 6 |
| 8. | பீஷ்மர் பிரம்மசரியம் | 0 | 12 | 0 |
| 9. | கண்ணன் காட்டிய வழி (பரிசுப் பதிப்பு) | 0 | 12 | 0 |
| 10. | ஷை (சாதாரணப் பதிப்பு) | 0 | 8 | 0 |
| 11. | பல்லவ மகேந்திர வர்மன் | [illegible] | 4 | 0 |
| 12. | வெண் தாமரை | 1 | 6 | 0 |
| 13. | அழகி | (அச்சில்) | | |

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை